பக்கங்கள் : பதினாறு.

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (08.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 347

# வாக்காளர்களை அடையாளம் காணும் நடைமுறை குறித்து நாளை உத்தரவு!

## உயர் நீதிமன்றம் வழங்கும்

கொழும்பு, நவம்பவர் 08

**இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்களும் ஏனைய வாக்காளர்களும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது அவர்களை அடையாளம் காணும் ஒரு நடைமுறை குறித்து உயர் நீதிமன்றம் நாளை புதன்கிழமை அறிவிக்கவிருக்கின்றது.**

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த நடைமுறை நாளை அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்கள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் மேற்கில் மிதிவெடியில் சிக்கி ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,நவ.8

காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்தார்.

சுழிபுரம் மேற்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.சுப்பிரமணியம் (வயது 30) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவார். இதில் அவர் தனது ஒரு காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயம் அடைந்தார். இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-78)

## சந்திரிகாவின் பட்ஜெட்டே இன்று தாக்கல் என்கிறார் நிதி அமைச்சர்

கொழும்பு, நவ.8

இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசின் வரவு - செலவுத்திட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொருளாதார இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் நிதியமைச்சர் சரத் அமுனுகம. அரசினால் இறுதி செய்யப்பட்ட வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் நேற்று நிதியமைச்சில் செய்தியாளர்களைச் சந்தித்துத் தகவல் வெளியிட்டார் நிதியமைச்சர் அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட இந்த வரவு -

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று நடந்த தபால்மூல வாக்களிப்பு மந்தம்!

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு குடாநாட்டில் நேற்று மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றைய வாக்களிப்பில் அரச அலுவலர்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பை கண்காணித்தனர்.

கடந்த வாரம் வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களான போல், மற்றும் ஹன்னா அம்மையார் ஆகிய இருவருமே இந்த கண்காணிப்பு நட

(16ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் புதிய கட்சி

கொழும்பு,நவ.8

மலையகத்தில் தேசிய ஜனநாயக தமிழ் காங்கிரஸ் என்ற புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கட்சி மலையக மக்களின் குறைபாடுகளை கருத்திற் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியிடம் நேற்றுமுன்தினம் ஆறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் என்.வி.கே.கே.வேரகொடவை நேற்றுமுன்தினம் சந்தித்து மேற்படி தேசிய ஜனநாயக தமிழ் காங்கிரஸின் தலைவர் வி.சங்கரலிங்கம் தமது கட்சியின் ஆறு கோரிக்கைகளையும் முன்வைத்தார். அது குறித்து உரையாடிய ஐ.தே.க. பொதுச் செயலாளர், ஜனநாயகத் தமிழ் காங்கிரஸின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

''ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் எமது கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப் படும் என ஐ.தே.க. செயலாளர் உறுதியளித்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை ஊடான லொறிப் போக்குவரத்து நவம்பர் 16, 17 திகதிகளில் இடம்பெறாது

வவுனியா, நவ. 8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தினமான 17 ஆம் திகதியும் அதற்கு முதல் நாளான 16ஆம் திகதியும் 'ஏ - 9' நெடுஞ்சாலையில் ஓமந்தை ஊடாக லொறி போன்ற பார ஊர்திகளின் போக்குவரத்து இடம் பெறாது.

அந்த இரு நாட்களிலும் பார ஊர்திப் போக்குவரத்தை நிறுத்துவது என வவுனியா அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

வன்னித் தேர்தல் அத்தியட்சகரும், வவுனியா அரச அதிபருமான எஸ். சண்முகத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இராணுவ உயரதிகாரிகள் மற்றும் பொலீஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். அங்கு தேர்தல் தினத்தன்றும் முந்திய நாளும் 'ஏ - 9' வீதி வழியே - ஓமந்தை ஊடான

(16ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை!

அக்கரைப்பற்றில் நேற்று மாலை கூலித் தொழிலாளியான வேலாயுதம் ஞானசேகரம் (வயது - 40) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கூலித் தொழிலாளியான அவர்தொழில் முடிந்து சாகாமம் வீதிவழியாக வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் எதிரே வந்தோர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என அக்கரைப்பற்றுப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## பகிஷ்கரிப்பு யோசனையைப் பயன்படுத்தி வாக்குகளை அள்ளிச் சுருட்டுவதற்குத் திட்டம்?

கொழும்பு, நவ. 8

எதிர்வரும், ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும் என்ற எண்ணம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தீவிரமடைந்து வரும் சூழ்நிலையில் -

மக்களின் பகிஷ்கரிப்பைப் பயன்படுத்தி வாக்குகளை அள்ளிச் சுருட்டும்திட்டம் ஒன்று தெற்கிலிருந்து தீட்டப்படுவதாக சில வட்டாரங்களில் செய்தி கசிந்திருக்கின்றது.

பகிஷ்கரிப்பில் மக்கள் ஈடுபட்டால் வாக்குச் சாவடிகளுக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் சமுகம்தரமாட்டார்கள். அத்துடன் தென்னிலங்கை வேட்பாளர்களுக்காக வடக்கு, கிழக்கு வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு முகவர்களும் இருக்கமாட்டார்கள்.

இந்த வெறுமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒருசில ஆயிரம் பேரை வடக்கு, கிழக்குக்கு கொண்டுசென்று அங்கு வைத்திருந்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியாக அனுப்பி வாக்குகளைத் தமது வேட்பாளருக்கு ஆதரவாகப் போடவைக்கத் திட்டம் தீட்டப்படுகின்றதாம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நவீன் ஆற்றிய உரை செய்தியாளரால் சரிவரப் புரிந்துகொள்ளப்படவில்லையாம்!

### உதயன் செய்திக்கு அவர் நேற்று மறுப்பு அறிக்கை

கொழும்பு, நவ.8

நேற்றைய 'உதயன்' தலைப்புச் செய்தியை மறுத்துரைத்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நவீன் திஸநாயக்கா.

சிங்களத்தில் தாம் ஆற்றிய உரையை 'உதயன்' செய்தியாளர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எழுதியிருப்பார் என்ற கருத்துப்பட மறுப்புரை ஒன்றை அவர் அனுப்பிவைத்திருக்கின்றார்.


(16ஆம் பக்கம் பார்க்க)

## தமது செய்தி முற்றிலும் சரி என்கிறார் செய்தியாளர்

நவீன் திஸநாயக்காவின் கினிகத்தேனைக் கூட்டச் செய்தியை நேரில் சென்று திரட்டி அனுப்பிய 'உதயன்' செய்தியாளர் தமது செய்தி நூற்றுக்கு நூறுவீதம் சரியானது என உறுதிப்படுத்துகின்றார்.

நன்கு சிங்கள மொழியில் தேர்ச்சியும், பயிற்சியும் உள்ளவர் அச் செய்தியாளர். இந்தக் கூட்டத்தில் நவீன் திஸநாயக்கா பேசியபோது, மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் விஜயகுமாரும் இருந்தார். அதற்குப் பின்னர் உரையாற்றிய விஜயகுமார், நவீன் திஸநாயக்காவின் மேற்படி கருத்துக்களால் உருவான அதிர்ச்சியைச் சமாளிக்கும் விதத்தில் - சமாதானம் கூறும் வகையில் - கருத்துக்களை வெளியிட்டார் என்கிறார் அச்செய்தியாளர்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



கந்த சஷ்டி விரதத்தின் இறுதிநாளான நேற்றுமாலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற சூரன் போர் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஆட்டுக் கடா வாகனத்தில் ஆறுமுகசாமி வெளிவீதியில் ஆரோகணித்து வந்து சூரனை சங்காரம் செய்வதையும், முருகனின் பின்னால் அணிவகுத்துச் சென்ற வீரவாகு தேவர் படையணியினரையும், பக்தர் திரளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:பிரபா)

# தாழமுக்கம் மேலும் நீடிப்பதால் குடாநாட்டில் மழை தொடர வாய்ப்பு

## திருநெல்வேலி வானிலை நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

தாழமுக்கம் நிலவுவதால் குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழை அடுத்த சில தினங்களுக்குத் தொடர வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் திருநெல்வேலி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

குடாநாட்டில் இந்த ஆண்டுக்கான மழை வீழ்ச்சி நேற்றுக்காலை வரை 595.5 மில்லி மீற்றர்களும் -

இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்றுவரை 178.5 மில்லி மீற்றர்களும் -

மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதம்வரை பரவலாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, யாழ்.மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழை வீழ்ச்சியான ஆயிரத்து 260 மில்லி மீற்றர்கள் என்ற அளவு இவ்வாண்டு எட்டப்பட வாய்ப்புள்ளது.

- இவ்வாறு வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது.

இதேவேளை, குடாநாட்டில் பரவலாகத் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மழை தொடர்வதால் தாழ்ந்த நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கத் தொடங்கியுள்ளது.

நேற்றுக் காலைமுதல் மழை பெய்ததால் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்பட்டது. திருநெல்வேலி, அரியாலை, கொக்குவில், யாழ்.பொம்மை வெளிப்பகுதிகளில் உள்ள தாழ்ந்த நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியிருந்தது.

வடமராட்சி, தென்மராட்சி, தீவுப் பகுதி, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்குப் பிரதேசங்களிலும் தொடர் மழையினால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

(ஒ-7-12-ரி)

# தேர்தல் பணிக்கு குடாநாடுவர பெண் பொலீஸார் பின்னடிப்பு

கொழும்பு,நவ.8

குடாநாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளில் ஈடுபடவெனத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 பெண் பொலீஸாரில் பலர் இங்கு வருவதற்கு மறுப்புத் தெரிவித்து ஆட்சேபனை மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பணிபுரிவதில் தாம் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்கள் மற்றும் சிக்கல்கள் பற்றி அம்மனுக்களில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தேர்தல் பணிகளுக்கு பெண் பொலீஸாரை குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதில் இதனால் சிக்கல் உருவாகியுள்ளதாக பொலீஸ் தேர்தல் பிரிவுப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-206)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சட்ட உதவிமையம் நேற்றுத் திறப்பு

தென்மராட்சி,நவ.8

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இலவச சட்ட உதவிமையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இப் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் இந்த மையத்தினூடாக இலவசச் சட்ட உதவிகளைப் பெறமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அரசியலமைப்பு விவகார தேசிய நல்லிணக்க அமைச்சு ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்ட நிறுவனத்தினர் இந்த மையத்தினை ஆரம்பித்துள்ளனர்.

நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் குடும்பப் பிணக்கு, காணி, பணப் பிரச்சினை மற்றும் மணவிலக்கு போன்ற வழக்குகளுக்கு இலவசசட்ட உதவி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்ட நிறுவனத்தின் தேசிய திட்டப் பகுப்பாய்வாளர் திருமதி பிரட்றிக் அபேரத்ன அலுவலகத்தினை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி விவேகா ஸ்ரீவர்த்தன, பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இந்த மையத்தில் சட்ட உதவி பெறவிரும்பும் பொதுமக்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## முன்பள்ளி ஆசிரியர் கற்கை நெறி

யாழ்ப்பாணம்,நவ.8

திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தின் முன்பள்ளி ஆசிரியர் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக் கழகத்தில் இயங்கும் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்ப தாரர் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவராக இருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ஒ-182-203)

# மோட்டார் திணைக்கள அலுவலகம் நாளைமுதல் நவ.23வரை இயங்காது

## ஆனால் 'லைசென்ஸ்' பரீட்சைகள் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,நவ.8

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் செயற்பாடுகள் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறமாட்டாது என்று பதில் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தோருக்கான எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஆகியவை இக்காலப் பகுதியில் நடைபெறும் என்றும் - இப் பரீட்சைகளுக்கு திகதி பெற்ற பரீட்சாத்திகள் தமக்கு வழங்கப்பட்ட திகதிகளில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்றும் -

அவர் மேலும் கூறியுள்ளார்.

(ஒ)

## யாழ்.பல்கலை நிர்வாகத்தைக் கண்டித்து

# முகாமைத்துவ பீட மாணவர்கள் நேற்று விரிவுரைப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை அடையாள விரிவுரைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தினர்.

மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சியை ஒழுங்குபடுத்த பல்கலைக்கழக நிர்வாகம் தவறியமையைக் கண்டித்தும் -

மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரியும் -

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் பல்கலைக்கழக நிர்வாகம் காட்டும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் -

இந்த அடையாளப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது என்று யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

இந்த அடையாளப் பகிஷ்கரிப்புக்கு பல்கலைக்கழக நிர்வாகம் தகுந்த மதிப்பளித்து காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றும் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஒ)

## குளவிகள் கொட்டி மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

குளவிகள் கொண்டியதில் மூதாட்டி ஒருவர் மரணமடைந்தார்.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்தவரான எஸ்.செல்லக்கிளி (வயது 78) என்ற மூதாட்டியே இவ்வாறு மரணமானார்.

நேற்றுமுன்தினம் குளவியினால் கடியுண்டு காயம் அடைந்த இவருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார். (த- 78)

# ஜனாதிபதியின் செயலாளர் கனடாத் தூதுவராகிறார்

கொழும்பு, நவ.08

கனடாவிற்கான புதிய இலங்கைத் தூதுவராக, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ. ஜே.எஸ். கருணாரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தூதுவர் பதவிக்கான வெற்றிடம் நீண்டநாள் நிலவியது. இறுதியாக பாதுகாப்பு முன்னாள் செயலர் சந்திரானந்த டி சில்வாவின் பெயர் இந்தப் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தபோதும் கனேடிய அரசு அதனை நிராகரித்திருந்தது. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக சந்திரானந்த டி சில்வாவின் பெயரை நிராகரிப்பதாக அப்போது கனேடிய அரசு சுட்டிக் காட்டியிருந்தது.

இதனையடுத்தே ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ன இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அடுத்தமாத முற்பகுதியில் கருணாரட்ன தமது தூதுவர் பதவியை ஏற்கவிருக்கிறார் எனத் தெரிகிறது. (ஒ-206)

## பாம்பு தீண்டி சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.8

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவேளை, பாம்பினால் கடியுண்ட மூன்று வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் உடுப்பிட்டி நாவலடி என்ற இடத்தைச் சேர்ந்த முருகையா ரூபிகா என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

பாம்பு கடித்தவுடன் சிறுமியை பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அப்போது வழியில் சிறுமி உயிரிழந்தார். (த-78)

உதயன்
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து விட்டுக் கொடுக்கும் இடதுசாரிகள்

பேரினவாதத்தைப் பெரிதும் கிளப்பாமல் இதுவரை அரசியல் செய்து வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் தமக்கு உறுதிப்படுத்தப்பட்டதும் பௌத்த - சிங்களப் பேரினவாதச் சகதிக்குள் தம்மை முற்றாக மூழ்கடித்துக் கொண்டார்.

அரசியல் வெற்றிக்காகப் பேரினவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் சராசரி அரசியல்வாதியே தாம் என்பதைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்திக் கொண்டமை தமிழரைப் பொறுத்தவரை அப்படி ஒன்றும் ஆச்சரியமான விடயம் அல்ல. எதிர்பார்க்கப்பட்டதே.

ஆனால், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, இன சமத்துவம் என்பன பற்றியெல்லாம் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து முன்னர் அதிகம் பிரசாரம் செய்து வந்த வாசுதேவ நாணயக்கார, இந்த விடயங்களை எதிர்க்கும் சாராசரிப் பேரினவாத அரசியல்வாதியாக, சொல்லிலும், கொள்கைப் போக்கிலும் தம்மை வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தி நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கடைசியாக எடுத்திருப்பதுதான். தமிழர்களைப் பெரும் ஆச்சரியத்திலும், விசனத்திலும் மூழ்கடித்திருக்கின்றது.

'இடதுசாரிக் கொள்கை' என்ற பெயரில் கோமாளித்தனம் புரிந்த - புரிகின்ற - அரசியல்வாதிகளின்றும் தாமும் வேறுபட்டவரல்லர் என்பதை நிரூபித்திருக்கின்றார் வாசுதேவ.

கடந்த ஐம்பது , அறுபது ஆண்டுகால இலங்கை அரசியலை எடுத்து நோக்குபவர்கள் ' இடதுசாரிகள்' என்ற பெயரில் புரியப்பட்ட பித்தலாட்டங்களைப் பார்த்து, எள்ளிநகையாடுவதைத் தவிர வேறு வழியேயில்லை என்ற முடிவுக்கே வருவர்.

இடதுசாரிப் போர்வையில் இருக்கும் பலருக்கு எமது இந்தக் கூற்று சில சமயம் எரிச்சலையும், கோபத்தையும் தரலாம். ஆனால், அது தான் உண்மை.

இந்த நாட்டிலே இரண்டு தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் முற்றி, பெரும்பான்மைத் தேசிய இனம், சிறுபான்மை இனத்தை அடக்கி,ஒடுக்கி, ஒடுக்குமுறை நிகழ்த்துகின்றபோது தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபடுவது சாத்தியமேயற்றது.

இலங்கையில் தேசிய ஒடுக்குமுறையின் குரூரப் பரிமாணங்களைப் புரிந்து கொண்டு, அடக்கப்படுகின்ற மக்களின் அடிமனதில் இருந்து எழும் அவலக்குரலை செவிமடுக்கும் எண்ணமோ, ஆழ்ந்த மன உணர்வோ, தீர்க்க தரிசனமோ இலங்கையின் இடதுசாரித் தலைவர்கள் எனத் தம்மை அழைத்துக்கொண்டிருந்த பலருக்கும் இருக்கவேயில்லை.

ஒடுக்கப்பட்ட ஓர் இனத்தின் தேசியப் போராட்டத்துக்கு மேலானதாக, தாங்கள் குறிப்பிடும் வர்க்கப் போராட்டத்தை முன்னிறுத்தி, முண்டுகொடுத்து, முன்தள்ள அவர்கள் முயற்சித்தனர்.

ஒரு தேசிய இனம் அவலமான முறையில் ஒடுக்கப்படும்போது இந்தப் பிரச்சினையைப் புறந்தள்ளி விட்டு அங்கு தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபடுவது - அனைத்துலக தொழிலாளர்களுடன் ஒன்றுபட்டு வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பது - அசாத்தியமானது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேயில்லை.

அதுமாத்திரம் அல்ல, தமிழர் என்ற ஓர் ஒடுக்கப்பட்ட இனத்தின் தேசிய அரசியல் போராட்டத்தின் உட்கிடைக்கையாக அமைந்த முற்போக்கான பண்புகளை, புரட்சிகர அம்சங்களை, அவற்றின் ஆழமான அர்த்த பரிமாணங்களை இந்த 'இடதுசாரிகள்' புரிந்துகொள்ள மறுத்துவிட்டார்கள்; அல்லது மறந்து விட்டார்கள்.

இலங்கையில் இடதுசாரித் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டவர்கள் ஐம்பதுகளில் சிறுபான்மையினரான தமிழர்களின் வாழ்வியல் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பினர் என்பது உண்மையே. ஆனால், அறுபதுகளிலே அரசியல் சந்தர்ப்பவாதத்துக்கு வளைந்து கொடுத்து, சிங்கள, பௌத்த மேலாண்மைப் போக்குடைய பேரினவாதத்துக்கு அவர்கள் அடிபணிந்து அதை அரவணைத்துக் கொண்டார்கள்.

“ஒரு மொழி இரு நாடு; இருமொழி ஒரு நாடு” - என்று தமிழ் மொழிக்கு எதிரான இன ஒடுக்க நடவடிக்கை குறித்து முன் கூட்டியே எச்சரித்த பழுத்த இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர். டி. சில்வாதான் பின்னர், அடிப்படை புரட்சிகரச் சிந்தனைகள், இடதுசாரிப் பண்புகள் போன்றவற்றுக்கு முரணாகப் போய், பௌத்த மதத்துக்கு தனி மேலாண்மை உரிமை வழங்குதை உறுதிப்படுத்தும் வகையில் தனி அத்தியாயத்தை - ஆரம்ப அத்தியாயத்தை - அரசமைப்பில் சேர்த்து, அதனை எழுத்திலும் சட்டத்திலும் பதித்து புதிய பேரினவாத சாசனத்துக்கு வழிவகுத்தார். அது, இந்த இடதுசாரிகளின் அரசியலில் வளைந்து கொடுத்த கொள்கைப் போக்கின் அங்கமாகவே நிகழ்ந்தது.

பேரினவாதிகளோடு கூட்டுச் சேர்ந்து விட்டுக்கொடுக்கும் சந்தர்ப்பவாதத்தில் வழுக்கி விழுந்த இடதுசாரித் தலைவர்களின் பட்டியலில் - கொல்வின் ஆர். டி. சில்வா , என் . எம். பெரேரா போன்ற மூத்த தலைவர்களின் வரிசையில் - இப்போது கடைசியாகச் சேர்ந்து கொண்டிருக்கிறார் வாசுதேவ நாணயக்கார.

தமிழரின் நியாயமான போராட்டத்துக்கு எதிராகப் பேரினவாதப் போக்கில் தம்மை நிலைநிறுத்தியிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, பகிரங்கமாக ஆதரவு கொடுக்கும் வாசுதேவவின் நடவடிக்கை அதையே காட்டுகிறது.

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் வரலாற்றுப் புறநிலைகளை, அதை முன்னெடுக்கும் தமிழ் சமூகத்தின் புரட்சிகர சிந்தனைகளை, சித்தாந்தங்களை, ஒடுக்குமுறைக்கு எதிரான, அவர்களின் கிளர்ச்சியின் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளாதவர்களே இன்று இடதுசாரி முகமூடியோடு நடமாடுகிறார்கள். அவர்களினால் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கான சுதந்திர உணர்வை, உள்ளத் தாகத்தை இலகுவாகப் புரிந்து கொள்வது கஷ்டமே.

# பாடசாலை செல்லாத மாணவர் நலன்கருதி கிராமம்தோறும் விழிப்புணர்வுச் செயற்பாடு

அச்சுவேலி,நவ.8

யாழ்.கல்வி வலயத்தில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்கான விசேட விழிப்புணர்வுச் செயற்பாடு கிராமம் கிராமமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கற்றலுக்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டுத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 12 கிராமங்களில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு இடம்பெற்று வருவதாகவும் -

யுனிசெவ் அமைப்பின் அனுசரணையுடன், யாழ். கல்வி வலய முறைசாராப் பிரிவினர் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறும்.

குறிப்பாக -

பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் பற்றிய விவரங்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குக் கட்டாயக் கல்வி பற்றி எடுத்துரைத்தல் - விவரங்கள் சேகரித்தல் -

கட்டாயக் கல்வியின் முக்கியத்துவத்தை மேம்படுத்த அரசினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள்-அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகள் பற்றி பெற்றோருக்கு விளக்கமளித்தல்-

திரைப்படம் மூலம் கற்றலின் அவசியம், கற்றல்முறை மற்றும் கல்வியின் அவசியம் பற்றி மேலதிக விளக்கமளித்தல், கற்றலுக்கான வளவசதியை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கற்றல் விழிப்புணர்வுச் செயற்பாட்டு நிலையங்களும், கிராமங்களும் வருமாறு:-

சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் (குருநகர்), சென்.றோக் வித்தியாலயம் (குருநகர் தொடர்மாடி), சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை (புத்தூர்), தோப்பு அருள்நந்தி வித்தியாலயம் (அச்சுவேலி மேற்கு), நல்லூர் வடக்கு ஞானோதயா (ஆனந்தபுரம் - செல்வபுரம்), அரியாலை பார்வதி வித்தி.(அரியாலை), புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலயம் (புத்தூர் கிழக்கு), புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி (புத்தூர் மேற்கு), கந்தவேள் வித்தியாலயம் (ஆனந்தபுரம் - செல்வபுரம்), பத்தமேனி இரத்தினேஸ்வரி (பத்தமேனி), கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் (கந்தர்மடம்)

முறைசாராக் கற்றல் விழிப்புணர்வுத் திட்டத்தை உரியமுறையில் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

(எ-11)

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு யாழில் 624 நிலையங்களில் நடக்கும்

## 7 லட்சத்து ஆயிரத்து 938 பேர் வாக்களிக்கத் தகுதி என அறிவிப்பு

அச்சுவேலி, நவ.8

எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் 7 லட்சத்து ஆயிரத்து 938 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கென 624 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

2004ஆம் ஆண்டு வாக்காளர் டாப் பின்படி தொகுதிவாரியாக ஊர்காவற்றுறைத் தொகுதியில் 52 ஆயிரத்து 986 பேரும் -

வட்டுக்கோட்டைத் தொகுதியில் 62 ஆயிரத்து 781 பேரும் -

காங்கேசன்துறைத் தொகுதியில் 67 ஆயிரத்து 133 பேரும் -

மானிப்பாய்த் தொகுதியில் 68 ஆயிரத்து 783 பேரும்

கோப்பாய்த் தொகுதியில் 63 ஆயிரத்து 752 பேரும் -

உடுப்பிட்டித் தொகுதியில் 55 ஆயிரத்து 499 பேரும் -

பருத்தித்துறைத் தொகுதியில் 47 ஆயிரத்து 188 பேரும் -

சாவகச்சேரித் தொகுதியில் 62 ஆயிரத்து 22 பேரும் -

நல்லூர்த் தொகுதியில் 70 ஆயிரத்து 251 பேரும் -

யாழ்ப்பாணத் தொகுதியில் 62 ஆயிரத்து 84 பேரும் -

கிளிநொச்சித் தொகுதியில் 89 ஆயிரத்து 494 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-11-202)

# தேர்தலை முன்னிட்டு 3 தினங்கள் சகல பாடசாலைகளும் மூடப்படும்

கொழும்பு,நவ.8

பாடசாலைகள் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ளதை அடுத்து எதிர்வரும் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளையும் மூடிவிடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய இந்த மூன்று தினங்களிலும் பாடசாலைகள் இடம் பெறமாட்டாது என்று கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புத் தொடர்பாக நாடளாவிய ரீதியில் 10 ஆயிரத்து 400 வாக்களிப்பு நிலையங்கள் அமையவுள்ளன. இவற்றில் பெருமளவு வாக்களிப்பு நிலையங்கள் பாடசாலைகளிலேயே அமையவுள்ளதை முன்னிட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-206)

## நாளை

ஐப்பசி 23
புதன்கிழமை
09.11.2005
திதி: அட்டமி
முன்னிரவு 06.59 வரை
நட்சத்திர. திருவோணம்
முற்பகல் 09.22 வரை
சுபநேரம்: 04.35- 06.05
ராகுகாலம்: 12.05- 01.35
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தீவிரமான நம்பிக்கை இருந்தால் எமக்கென ஒரு புதிய பாதையை உருவாக்கி அதில் உறுதியுடன் பயணிக்க முடியும். - ஓர் அறிஞர்.


# மெழுகுதிரி தயாரித்தல் பயிற்சிக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ.8

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் பெண்களுக்கான மெழுகுதிரி தயாரித்தல் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் செயலாளர் தெரிவித்தார்.

(எ-190)



# தமிழர்கள் தம் இலக்கை எட்டும் சமயத்தில் தேர்தலில் வாக்களிப்பது பின்னடைவு!

## தீவகப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.8

மறுக்கப்பட்ட எமது இறைமையை, எமது பாரம்பரிய தாயகத்தை, சுய நிர்ணய உரிமையை நாம் எட்டும் காலம் நெருங்கி விட்டது. இக்கட்டத்தில் ஜனாதிபதித்தேர்தலில் நாம் வாக்களிப்பது தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளைக் கொச்சைப்படுத் துவதாக அமையும். எனவே, எமது ஒற்றுமையைச் சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்துவோம்.

இவ்வாறு தீவகப் பொது அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி பொதுமக்களுக்கு விடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை முற்றாகப் புறக்கணிக்குமாறு தீவக பொது அமைப்புகளின் ஒன்றியம் அனைத்து தமிழ் மக்களையும் கேட்டுக் கொள்கின்றது.

சிங்கள தேசத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழர் தமது நிலைப்பாட்டை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமது ஒட்டு மொத்த ஒற்றுமையின் மூலம் 22 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பினர். சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தை அழிப்பதென்பதில் முழுமையான ஈடுபாட்டுடன் பல்வேறு வழிமுறைகளையும் கையாண்டு வருகின்றது. ஸ்ரீலங்கா அரசியல்யாப்பு பேரினவாதத்தை நிலை நிறுத்தவே உருவாக்கப்பட்டது.தமிழ் பேசும் மக்களை ஒடுக்கும் நடைமுறைகள் வகுத்து உருவாக்கப்பட்ட யாப்பு வஞ்சகப் பொறியே. சிங்கள அரசியல் கட்சிகள் பேரினவாதத்தை மையப்படுத்தி தமிழ் பேசும் மக்களது கௌரவத்தை, இருப்பை, பாதுகாப்பை, சுதந்திரத்தை, அடிப்படை உரிமைகளை புறக்கணித்துள்ளன. தமிழர்கள் இரண்டாம் தரப்பிரசைகளாக ஒதுக்கப்படுகின்றார்கள்.இனியும் சிங்களத்திடம் இருந்து எதிர்பார்ப்பது யாது?

கடந்தகால வரலாறு சிங்களத்தினால் தமிழன் ஏமாற்றப்பட்ட வரலாறாக அமைந்து விட்டது. இனியும் நாம் ஏமாறலாமா? எமது இரத்தம் சிந்திய போராட்ட வரலாறு இன்று ஒரு முக்கியமான கட்டத்திற்கு வந்துவிட்டது. மறுக்கப்பட்ட எமது இறைமையை, எமது பாரம்பரிய தாயகத்தை, சுயநிர்ணய உரிமையை நாம் எட்டும் காலம் நெருங்கிவிட்டது. இக்கட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் நாம் வாக்களிப்பது தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளைக் கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே, எமது ஒற்றுமையை சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்துவோம்.

ரணில்,மஹிந்த ஆகிய இருவருக்கும் இடையில் போட்டி. பேரினவாதத்தை யார் நிலை நிறுத்துவது. அதில் வல்லவர் யார் என்பதுதான். ஜனாதிபதித் தேர்தல் எவ்வகையிலும் தமிழ் பேசும் மக்களது வாழ் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. போர்நிறுத்த உடன்படிக்கை காலத்தில் ஆறு சுற்றுப்பேச்சுகளின் போது எந்த முடிவும் எட்டப்படவில்லை 'சிரான்' ஆழிப்பேரலை அனர்த்த புனர்வாழ்வு பொறி அமைவு முதலியன நடைமுறைப்படுத்த முடியாமல் முடக்கப்பட்டமை.இவையும்முன்னைய உடன்படிக்கை கள் போன்றவாறே பேரினவாதிகளால் முடக்கப்பட்டன.

✱தன்னைச் சமாதானப் பிரியனாக காட்டும் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலைப் பார்ப்போம்-

1.கிழக்குப் பிராந்தியத்தில் நவீன பொலீஸ் படை உருவாக்குதல் (வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்காக).

2.சிறந்த நவீன இராணுவத்தை உருவாக்குதல் -

3.எல்லைப்புற கிராமங்களில் இருக்கும் சிங்களவருக்கு ஆயுதங்களைக் கொடுத்தல்.

-4.சமஷ்டிகுறித்துத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் இல்லை-

5.எந்தத் தீர்வுக்கான முடிவு எட்டப்பட்டாலும் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடப்படும். அதாவது சிங்கள பெரும்பான்மையே முடிவெடுக்கும்.இது தமிழர் மீது திணிக்கப்படும். இது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒடுக்குபவன் தரும்பிச்சையை ஒடுக்கப்படுபவன் ஏற்கவேண்டும்-

இனி இனவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்துள்ள பிரதமர் மஹிந்தவின் சிந்தனையைப் பார்ப்போம்

1.தாயகப் பிரதேசம் கிடையாது.

2.சமஷ்டி கிடையாது

3.ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு கிடையாது.

4.ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவலாக்கல்.

5.அபிப்பிராய வாக்கெடுப்பு

இந்த இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்க்குழுவின் கொள்கைப் பிரகடனம்

1.மத்தியில் கூட்டாட்சி

2.வடக்கு - கிழக்கு பிரிக்க முடியாத சுயாட்சி சிந்திப்போம் செயற்படுவோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-202)

# வஞ்சக ஜனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்தமாக நிராகரியுங்கள்

## அரச எழுதுவினைஞர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள வஞ்சக ஜனாதிபதித் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கவேண்டும்.

-இவ்வாறு தமிழ்பேசும் அரச எழுதுவினைஞர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-ஸ்ரீலங்காவின் சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நாடகம் அரங்கேறுகிறது. ஸ்ரீலங்கா ஜனாதிபதியே ஸ்ரீ லங்காப் படைகளைக் கட்டுப்படுத்தும் முதன்மைத் தளபதியுமாவார்.

அதாவது, இன்னுமொரு வகையில் சொல்வதானால் தமிழினத்தை அழிப்பதற்கான சிங்கள, பௌத்த பேரினவாதப் பொறி அமைவை இயக்குவதற்கான தலைமை இயக்குநரை சிங்கள தேசம் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இதுவாகும்.

ரணிலும், மஹிந்தவும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தை சிறப்பாக முன்னெடுக்க வல்லவர்கள் யார் என்ற போட்டா போட்டியில் இறங்கியுள்ளனர்.

அவர்கள் சார்ந்துள்ள கட்சிகள்,அதிதீவிர பேரினவாத் அமைப்புகளாக நீண்ட காலமாக தமிழின அழிப்பில் ஈடுபட்டுவந்தன. இவை மறைக்க முடியாத உண்மைகளாகும்.

அத்துடன், வேட்பாளர்களான ரணில், மஹிந்த ஆகிய இருவருமே தமிழ் மக்கள் மீது அதீத அக்கறையுடன் புதிய பம்மாத்து அரசியல் போர்வையுடன் , தத்தமது ஒட்டுண்ணிகளுடன் வலம் வருகின்றர். வாக்குகளை யாசிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என்ற நச்சு எண்ணத்துடன் வலம்வரும் இவர்களது பொய்ப் பிரசாரங்கள் தமிழினத்தை மயங்க வைக்கப் போவதில்லை.

நவீன இராணுவத்தைக் கட்டியெழு ப்புவது, யாருடன் மோதுவதற்கு, ஒற்றையாட்சி எனும் காலாவதியாகிவிட்ட அரசியல் கருத்தை முன்வைப்பது எதற்காக, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் சாத்தியமா?

பேரினவாத வெறி பற்றி எரியும் சிங்கள தேசத்தின் அபிப்பிராய வாக்கெடுப்பில் தமிழினத்தின் வாழ்வுரிமை பேணப்படுமா? இந்தக் கேள்விகளை மனதில் அலசினால் தமிழ்பேசும் மக்களாகிய எமக்கு ஸ்ரீ லங்கா ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஒரே முடிவு தான் பிறக்கும்.அது ஸ்ரீ லங்கா ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவு தான்-என்று அதில் உள்ளது. (எ-13)

# திட்டமிடல் பிரிவின் பொறுப்பாளர்களாக உள்ளூராட்சி உதவியாளர்கள் நியமனம்

## பிராந்திய உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் தாம் கடமையாற்றும் அலுவலகங்களில் உள்ள திட்டமிடல் பிரிவிற்குப் பொறுப்பானவர்களாக நியமிக்கப்படுவர்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா இதனைத் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான கூட்டம் கடந்த 2ஆம் திகதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமையுரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணப் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட கடமைப்பட்டியலின் பிரகாரம் செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் தழுவு அனுமதியுடன் உள்ளூராட்சி உதவியாளர்களை செயலாளர்களாகப் பணிக்கு அமர்த்தவுள்ளேன்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த இரண்டு வார கால அவகாசம் தேவைப்படு கிறது.

உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு என விசேடமாக நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி 'உதவியாளர் மூலமே எதிர்காலத்தில் உள்ளூராட்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மேலும் உள்ளூராட்சிச் செயலாளர்களுடன் நடத்தப்படும் கூட்டங்களில் உள்ளூராட்சி உதவியாளர்களையும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(எ-185)

# சைவப்புலவர் சங்க ஒன்றுகூடல்


யாழ்ப்பாணம்,நவ.8

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஒன்றுகூடலும் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற சங்கப் போசகர் சைவப் புலவர் க. கந்தசாமியை பாராட்டும் விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (3-202)





யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையினர் ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நேற்றுமுன்தினம் காலை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தேசிய திட்டமிடல் தொடர்பாளர் திருமதி விவேகா ஸ்ரீவர்த்தன டி. சில்வா உரையாற்றுவதை முதல் படத்திலும் - சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமாந்திரன், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கே.குமாரவடிவேல் ஆகியோரை இரண்டாவது படத்திலும் - இதில் கலந்துகொண்ட ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: பிரபா).

# தியாக தீபம் மருத்துவமனையின் ஏற்பாட்டில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

புதுக்குடியிருப்பு,நவ.8

மாங்குளம் தியாக தீபம் மருத்துவமனையினர் மழைகாலத் தொற்று நோய்கள் குறித்த நடமாடும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

மாங்குளம் நகரப் பகுதி, புலிமெய்ச்சி நாதகுளம், அம்பகாமம், ஐயங்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய இடங்களில் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருக்கின்றன.

மழைகாலங்களில் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் பற்றியும் - அவற்றினை எவ்வாறு தடுப்பது பற்றியும் நோய்த்தொற்றிலிருந்து மக்கள் தம்மைத் தாமே பாதுகாப்பது போன்ற விடயங்களும் இந்தக் கருத்தரங்குகளில் எடுத்துக் கூறப்படுகின்றன.

பருவமழை ஆரம்பித்துவிட்டமையால் எதிர்காலத்தில் வாந்தி, வயிற்றோட்டம், டெங்கு மற்றும் நீர்மூலம் பரவும் நோய்கள் பற்றியும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இந்தக் கருத்தரங்குகளின்போது போதிய விளக்கங்கள் வழங்கப்படுவதாகவும் - கூறப்பட்டது.

மாங்குளம், அம்பகாமம், ஒலுமடு, பெரிய புளியங்குளம், பனிக்கன்குளம், கிழவன் குளம், வன்னிவிளாங்குளம், மூன்றுமுறிப்பு, பாலைப்பாணி ஆகிய கிராம மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக நீண்டதூரம் கால்நடையாகப் பயணம்செய்து மாங்குளம் தியாகி திலீபன் மருத்துவமனையினரின் சேவையைப் பெறவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-353)

# முல்லையில் மீனவருக்கு தொழில் உபகரணங்கள்

புதுக்குடியிருப்பு,நவ.8

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் நடைபெற்றது.

உப தலைவர் எஸ்.தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் 100 பயனாளிகளுக்கு வலைகள், தொழில் உபகரணங்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் முல்லைநகர் பொறுப்பாளர், போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (எ-353-202)

# சுகாதார சேவை ஒழுங்கமைப்பில் வாய்ப்புற்றுநோய் பரிசோதனை

கிளிநொச்சி,நவ.8

தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்கமைப்பில் வன்னிப் பிரதேசமெங்கும் வாய்ப்புற்றுநோயை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கான வேலைத் திட்டங்களும் விழிப்புணர்வும் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு பாவனையுள்ளவர்கள் தமது வாய் மென்சவ்வில் ஏதாவது வித்தியாசம் காணப்படின் - உணர்ந்தால் அயலிலுள்ள தமிழீழ சுகாதார சேவையினரை அல்லது திலீபன் மருத்துவ சேவையினரை அல்லது பல் வைத்தியர்களை அணுகித் தங்களைப் பரிசோதித்துக் கொள்ளுமாறு மக்களைத் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். (எ-202)

# முல்லையில் நிரந்தர வீடமைப்புப் பணிகள்

புதுக்குடியிருப்பு,நவ.8

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களில் 950 குடும்பங்களுக்கான நிரந்தர வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையின்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 457 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களும் தற்காலிகக் குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டன. அவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது.

மேற்படி குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க சில அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தன. இதன் பலனாகத் தற்போது சுமார் 950 வீடுகளுக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்த வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும் - என்றார்.(எ-353-202)

## தொற்றுநோய் குறித்து விழிப்புணர்வுக் கருத்தூட்டல்

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில் மழைகாலத் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை தமிழீழ நிர்வாக சேவையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கருத்தூட்டல்கள் வழங்கப்பட்டன. (எ-202)

## 206 குடும்பங்களுக்கு காணித்துண்டுகள்

கிளிநொச்சி,நவ.8

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டத்தின் முதற்கட்டமாகக் கட்டைக்காடு முள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் காணித் துண்டுகள் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தலா இரண்டு பரப்பு வீதம் 206 குடும்பங்களுக்கு இந்தக் காணித் துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் கிராம அலுவலர் செ. உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குடியேற்ற உத்தியோகத்தர் சி.தங்கவேலாயுதம், நில அளவை உத்தியோகத்தர்கள், கட்டைக்காடு, முள்ளியான் ஊரக மேம்பாட்டுக் குழுவினர், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் பகுதிக்கான வீட்டுத் திட்டத்தின் வீடுகளை 'சேவாலங்கா' நிறுவனம் அமைத்துக்கொடுக்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ-88)

## கிளிநொச்சியில் பற்சிகிச்சை முகாம்

கிளிநொச்சி,நவ.8

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு கிளிநொச்சி நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நடமாடும் பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு பற் சுகாதாரம் பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டது. பின்னர் 170 மாணவர்களைப் பார்வையிட்டனர். அவர்களில் 85 மாணவர்களுக்குப் பற் சிகிச்சை வழங்கப்பட்டது.

இத்துடன், கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்திலும் 175 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அதில் நூறு மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (த-36)

## கல்விக் கண்காட்சி

புதுக்குடியிருப்பு,நவ.8

உடையார்கட்டு, குரவில் தமிழ் வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி கடந்த 3ஆம் திகதி 8.30 மணியளவில் அதிபர் எஸ்.மேகநாதன் தலைமையில் நடைபெற்றது.

கண்காட்சி மண்டபத்தினை முல்லைத்தீவு வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வே.ஜெயம்சபாபதி வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார். பாடசாலை மாணவர்களின் ஆக்கவெளிப்பாடுகள் அனைவரையும் கவர்ந்ததாய் அமைந்தன.

மாணவர்களின் பல்வேறு வகையான ஆக்கங்கள் பாடரீதியாக வைக்கப்பட்டிருந்தன. (த-353)




# மரநடுகைத் திட்டம் மன்னாரில் ஆரம்பம்

பரந்தன்,நவ.8

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மன்னார் மாவட்டத்தில் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்தரும் தென்னை மற்றும் பழமரக்கன்றுகள் நடுகை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'யு.என்.டி.பி.' நிறுவனத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள மூன்றாம்பிட்டி, பாலியாறு கிராமங்களில் கடந்த 26ஆம் திகதி இந்த மரம் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டப் பொருண்மிய நிறுவனப் பொறுப்பாளர் சி.செழியன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மூன்றாம்பிட்டிக் கிராமத்தில் 120 குடும்பங்களுக்கும் பாலியாறு கிராமத்தில் 80 குடும்பங்களுக்கும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-352)

# மன்னார் - வெள்ளாங்குளம் வீதியில் சிதைவடைந்த நிலையில் மதகு

வெள்ளாங்குளம்,நவ.8

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னார் - வெள்ளாங்குளம் வீதியில் அமைந்துள்ள மதகு பலத்த சேதமடைந்துள்ளது. இந்த மதகின் ஊடாக போக்குவரத்துச் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த வருடம் இந்த மதகு உடைந்து பயணிகள் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் இருந்தது.

மக்களின் போக்குவரத்தைச் சீர்செய்யும் நோக்குடன் மன்னார் மாவட்ட கடற்புலிப் போராளிகளும் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினரும் இணைந்து சிரமதானம் மூலம் மதகினைத் துப்புரவு செய்து மண்மூடைகள் போட்டு, போக்குவரத்துக்கு உரியதாக ஓரளவு சீர்செய்து கொடுத்தனர்.

எனினும், கனரக வாகனங்களின் போக்குவரத்தாலும் இடையே பெய்த மழையினாலும் மண்மூடைகள் சிதைவுற்றுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதனால், இந்த மதகினைச் சீர்செய்து மக்கள் போக்குவரத்து செய்ய உதவுவதற்குப் பொது அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வரவேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-415-204)



சிதைவடைந்த பாலம்

## அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

வட்டக்கச்சி,நவ.8

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட சகலரையும் இதில் கலந்துகொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (202-405)

## மதகு சேதமடைந்ததால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

முழங்காவில்,நவ.8

மன்னார் -சங்குப்பிட்டி பிரதான வீதியில் 19ஆம் கட்டைச் சந்தியிலுள்ள மதகு உடைந்துள்ளது. இதனால், மேற்படி வீதியூடாகப் பொதுமக்கள் பயணஞ்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீதியின் நடுவில் இவ்வாறு உடைவு ஏற்பட்டுள்ளமையால் மரங்களால் அப்பகுதி அடையாளமிடப்பட்டுள்ளது.

ஆயினும், இரவு நேரங்களில் பயணஞ் செய்யும் போது விபத்துகள் ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளது.

இந்த மதகு உடைவைக் காரணங்காட்டி பஸ் சேவையை இடைநிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (323- 202)

## 12 வழிபாட்டுத் தலங்கள் சேதம்

ஒட்டுசுட்டான்,நவ.8

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேசத்தில் 12 வழிபாட்டுத் தலங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கையால் அடம்பன் பிரதேசத்தில் 7 இந்து ஆலயங்களும் 5 கிறிஸ்தவ தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 3 தேவாலயங்களும் 2 இந்து ஆலயங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. (எ-341-202)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களால் பெரும் தொல்லை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வீதிகளில் பயணஞ்செய்யும் பொதுமக்கள் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்காவதாகவும் - வாகனங்களைப் பின்தொடரும் நாய்களால் வாகன விபத்துகளைச் சந்திக்க நேரிடுவதாகவும் - கூறப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-323-202)

## சுயதொழில் கடன்கள்

புளியங்குளம்.நவ.8

வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு, பாசங்குளம், புதூர், புதூர்ச் சந்திப் பகுதி மக்களில் 31 பேருக்குச் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

4 பேருக்கு 15 ஆயிரம் ரூபா வீதமும் 27 பேருக்கு 20 ஆயிரம் ரூபா வீதமும் சுழற்சிமுறைக் கடன் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-355)

***

வவுனியா மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் புளியங்குளம் வடக்கு, முத்துமாரி நகர் கிராம மக்களின் உழைப்பாளரை இழந்து வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழுகின்ற 11 பேருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன் வழங்கல் மூலம் உழைப்பாளரை இழந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (த-355)

# வசதிகள் அற்ற நிலையில் இயங்கும் புங்குடுதீவு அரச வைத்தியசாலை

புங்குடுதீவு, நவ.8

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை24 மணி நேரமும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் வைத்தியசாலைக் கான அடிப்படை வசதிகள்எதுவும் செய்து கொடுக்கப்பட வில்லை.

இந்த வைத்தியசாலையில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் நாளாந்தம் 75 இற்கும் மேற்பட்டநோயாளர்கள்சிகிச்சை பெறுகின்றனர்.

இந்த வைத்தியசாலை 1990 ஆம் ஆண் டிற்குப் பின்னர் இயங்காத நிலையில் கட்ட டங்கள் யாவும் முழுமையாகச் சேதமடைந்து இருக்கின்றன.

இந்தநிலையில் புங்குடுதீவு சுவிஸ் வாழ் ஒன்றியத்தினர் வெளிநோயாளர் பிரிவு, ஆண், பெண்விடுதிகள், அம்புலன்ஸ் தரிக்கும் கட்டடம் என்பனவற்றை புனரமைப்புச் செய்து வருகின்றனர். அரச உதவி கிடைக்காததால் ஏனைய பகுதிகள் புனரமைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இதேவேளை - வைத்திய சேவையை மேற் கொள்ளவதற்கு வைத்திய உபகரணங்களும் பற்றாக்குறையாகவே உள்ளன.

அத்துடன், குடிதண்ணீர் வசதி, பற்சிகிச்சை நிலையம் , அம்புலன்ஸ் வசதி உட்பட பல்வேறு பட்ட வசதியீனங்களின் மத்தியில் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை இயங்கிவருகின் றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, உரியவர்கள் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து வைத் தியசாலைப் புனர மைப்பிற்கு உதவி செய்து மக்களின் அசௌகரி யங்களை நீக்க முன்வர வேண்டும் என்று அப் பிரதேச மக்கள் கேட் டுள்ளனர். (3-ரி-203)

## ஆண்டு ஐந்தினில் நினைவஞ்சலி

மண்ணில் முத்து 11 - 01 - 1939



விண்ணில் சொத்து 03 - 11 - 2000

**அமரர் சின்னையா முத்துக்கிருஷ்ணர்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: ஸப்தமி 08.11.2005

வாழ்வியலின் தத்துவத்தை வளமாக வகுத்து
பார்போற்றும் உத்தமராய் பாரினிலே வாழ்ந்து
கல்விப் பசிக்கு தீனி போட்ட உத்தமரே!
சோதனைகள் யாவினிலும் சாதனைகள் செய்தீரே!
வெல்லமுடியாத காலனிடம் தோற்றீரே!
வருடங்கள் ஐந்து மறைந்தாலும் ஆசானே!
மாறாது உம் நினைவுகள் எம்மை விட்டு.

அடைக சாந்தி!

கணக்கர் வளவு, கந்தரோடை. (சி-46129) (21.11.17) - குடும்பத்தினர்.

## வினாடி வினா போட்டிக்கு விண்ணப்பம்

அச்சுவேலி, நவ.8

யாழ்.பல்கலைக் கழக விவசாயபீட மாண வர் ஒன்றியம் வரு டாந்தம் நடத்தும் கிரு பாகர், ஜெயக்குமார் ஞாபகார்த்த வினாடி வினாப் போட்டிக்கு பாடசாலை மாணவர் களிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரியுள் ளது.

விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாண வர் ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது.

(எ-11)


## பயிற்சிப் பத்திரிகையாளர்கள் (JOURNALIST TRAINEES)
## பயிற்சிப் பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் (PHOTO JOUNRALIST TRAINEES)

★ துடிப்புமிக்க இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

★ பயிற்சியாளர்கள் ஆகக் குறைந்தது ஜி.சீ.ஈ உயர்தரம் கல்வித் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

★ பத்திரிகைத் துறையில் சுயமான ஆர்வமும், தொழில்புரிய - வேண்டும் என்று விருப்பமும் உள்ளவர்களே எமக்குத் தேவை.

★ கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பத்திரிகை அலுவலகங் களின் ஆசிரியபீடங்களில் இணைந்து பயிற்சிபெற ஆயத்த மாக இருக்கவேண்டும். பயிற்சிக்காலத்தில் மூன்று மாதங்கள் இந்தியாவிலும் சிறப்புப் பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்படும்.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் 12.11.2005இற்கு முன்பாக 'உதயன்' பணிமனையில் நேரில் கையளிக்கவும்.

விண்ணப்பித்தோருக்கான எழுத்துப்பரீட்சை 14.11.2005 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உதயன் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.


# வாசகர் திருமுகம்

## நெடுந்தீவு பின் தங்கியமைக்கு வெளியூர்அலுவலர்களா காரணம்?

கடந்த மாதம் 28ஆம் திகதிவெளியாகிய உதயனில் 'திங்கள் வந்து வெள்ளி திரும்பும் அலுவலர்களே நெடுந்தீவு பின் தங்கிருக்க முக்கிய காரணம் - சர்வதேச ஒருங்கிணைப்பு மையம் தெரிவிப்பு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டசெய்தி தொடர்பாக இதனை வரைகின்றேன்.

நெடுந்தீவு பிரதேசமானது யாழ்.பெருநிலப்பரப்பில் இருந்து மிகத்தொலைவில் பெரும் கடல் தாண்டி- பல நெருக்கடிகள்தாண்டி -பயணம்செய்து சேரவேண்டிய இடம் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், நெடுந்தீவினுடைய பின் தங்கலுக்கு வெளியிடங்களில் இருந்து வரும் அலுவலர்களே காரணம் என்பது எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாததொன்று என்பதனை சர்வதேச ஒருங்கிணைப்பு மையத்தினருக்கு இவ்வேளையில் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் தமது சுய உழைப்பிற்காகவும் நாட்டின் அசாதாரண சூழல் காரண மாகவும்புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் ஒவ்வொரு நாட்டவரும் நெடுந்தீவி னது பெயரினை முன்வைத்து ஒவ்வோர் அமைப்புகளை உருவாக்கி வைத்துக்கொண்டு இவ்வாறான அறிக்கைகள் விடுவதில் எந்த வித பயனும் இல்லை. தீவுக்கென இந்த அமைப் பால் என்ன செய்தோம்? என்ன செய்வோம்? என்ற நோக்கின்றி கடந்த காலங்களில் தீவு அனுபவித்த கஷ்டங்கள், தேவைகள் தொடர்பாக ஆராயாமல் அதற்குப் பரிகாரம் காணாமல் கடந்த நெருக்கயான சூழலிலும் தற்போதும் தீவின்அபிவிருத்தியிலும் கல்விச் செயற்பாட்டிலும் முன்னின்று உழைக்கும் வெளியிடஅலுவலர்கள் மீது இவ்வாறான அவப் பெயரினை உண்டுபண்ணிஅவர்களது மனங்களை சிதறடிக்கச் செய்கின்ற சேவை யினை மேலும் செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தி தீவினது பின்தள்ளலுக்குரிய அறிக்கைகள் விடுவதில் எந்தவித பயனும் இல்லை.

இதேவேளை, தீவினுடைய அபிவிருத்திபற்றி பேசும் இந்த அமைப்பு தனது ஆரம்பத்தி லிருந்து இன்று வரை சொல்லக்கூடிய வகையில் என்ன செய்தது என்றால் அங்கே வினா மட் டுமே விடையாகும். என்னசெய்யப்போகிறீர்கள் என்றால் பெரும்பட்டியல், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். ஆனால் நெடுந்தீவிலே தங்கிநின்று தங்களது சேவைகளை ஆற்ற வெளியிட அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு விடுதி வசதி இல்லை. அதேபோல் சீரான படகு இல்லை. இந்த நிலையிலும் திங்கள் வந்து வெள்ளி சென்றாலும் தமது கடமைகளை இதயசுத்தியுடன் செய்து முடிக்கின்றார்கள்என்றால்அதையாரும் மறுக்கமாட்டார்கள்.

இதைவிடுத்து இருக்கிற படகுசேவை நேரத்தைமாற்றினால் நெடுந்தீவு முன்னேறி விடும் என சிறு பிள்ளைத்தனமான சிந்தனைகள்தீவகத்தினை என்றுமே முன்னேற்றாது. அறிக்கையில் குறிப்பிட்டபடி ஓர் அலுவலர் காலை8மணிக்கு குறிகாட்டுவானுக்கு வர வேண்டுமாயின் வடமராட்சி, தென்மராட்சி என பலபகுதியில் இருந்து வருவோர்எப்படி வருவது? அதற்கு தற்போதைய நாட்டின் சூழ்நிலைகள் போக்குவரத்துக்கள் இடம் கொடுக்குமா?

இந்த வகையில் இருப்பதையும் கெடுக்காது முன்னேற்றகரமாக வறிய மக்களது தரத்தை உயர்த்தி தீவுக்கான நல்ல கடற்போக்குவரத்துப் படகொன்றை கட்டமைத்து விட்டு உள்ளூர் பொருளாதாரத்தினை முன்னேற்றவழி சமைத்தால் யாரையும் நம்பத் தேவையில்லை. தீவு தானாக வளரும்.

நெடுந்தீவு - II **தி.கண்ணன்.**

## மரவள்ளிக்கிழங்கும் இஞ்சிக்கிழங்கும்

மரவள்ளிக்கிழங்கையும் இஞ்சிக்கிழங்கையும் ஒரு நாளில் சாப்பிட்டால், நம் உடல் நிலையில் பல பக்கவிளைவான மாறுதல்கள் ஏற்பட்டு உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படும் என்று கூறுகின்றார்கள். இந்த அச்சம் பற்றி மாறுபாடான, முரண்பட்ட கருத்துக்களும் நம் சமூக அரங்கில் அரங்கேறி வருகின்றன. இவ்வாறான பயம், அச்சம் உண்மையிலேயே உண்மைதானா என்பது பற்றி அறிய நான் பலருடன் இதுபற்றிக் கேட்டும் உள்ளேன். ஆனால், கிடைத்த பதில்களில் முற்றுமுழுதான திருப்தி நிலை தென்படவில்லை 'அவர் சொல்கிறார்', 'இவர் சொல்கிறார்', 'அந்தக்காலம் முதல் எல்லோரும் இப்படித்தான் கூறுகிறார்கள்' என்று தான் பதில் வருகின்றதேயொழிய,இத்தகைய பயம் உண்மை தானா? உண்மையென்றால்! அதற்கான காரணங்கள் என்ன என்ன என்பது பற்றியெல்லாம் ஒருவர் கூடக் கூறவில்லை.

எல்லா மக்களின் நன்மை கருதியும் எல்லா மக்களுக்கும் இது தொடர்பான பிரச்சினை யில், பூரணமான தெளிவான விளக்கங்கள் கிடைக்கப்பெறவேண்டும் என்ற நன்னோக் கிலும் இவ்வாறான வினா ஒன்றை முழுச் சமூகத்தின் பாலும் கேட்க விரும்புகின்றேன். எனது பகிரங்கமான வினாவிற்கான பதில்களைத் தெரிந்தவர்கள் சமூக அக்கறை கருதியும் சமூக நலன் கருதியும் தங்களின் பதில்களையும் தெளிவான விளக்கங்களையும் தெரி விக்குமாறு நான் அப்பெரியவர்களை மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன்.

வல்வெட்டித்துறை. **பா.பிரபாகரன்.**

## மின்தடை நாள்களில் மாற்றம் செய்யமுடியுமா?

திருத்த வேலைகளுக்காக மின்தடை செய்வதுபற்றிய கால விவரங்களை மின்சார சபை அறிவித்துள்ளது.இது ஜனாதிபதித் தேர்தல் காலம். செய்திகள் மற்றும் தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள மக்கள் ஆர்வமாக இருப்பர்.

17.11.2005 வியாழக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தல் தொடர்பான முடிவுகள் 18,19 ஆம் திகதிகளிலேயே வெளிவரும்.மேலும் 19 ஆம் திகதியே இறுதி முடிவுகள் வெளியாவதுடன் நாட்டு நிலைமை தொடர்பான செய்திகளும் வெளிவரும் தற்போது பெரும்பான்மையான குடாநாட்டு மக்கள் உடனடியாக செய்தி களை அறிந்துகொள்ள இலத்திரனியல் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றையே பெரிதும் நம்பியுள்ளனர்.மின்தடை எனில் குறித்த ஊடகங்களை இயக்கமுடியாது.

எனவே, மின்சாரசபையினர் மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு மின்தடை நேர அட்டவணையை மாற்றியமைத்து உதவுமாறு மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கந்தர்மடம். **தமிழ்மகன்**


ஒரு பிள்ளைக்கு கல்வியை வழங்க பாடசாலை இல்லாதவரையில் நம் நாடு இருளை நோக்கியே செல்லும். 57 வருட கட்சி அரசியலின் பலாபலன் இது தானே? ஞானமுடன் சிந்திக்கப் பழகுவோம். சீர்குலைந்த நிர்வாகத்தை கட்டியமைப்பது சுயாதீன அரசாங்கத்தினால் மாத்திரமே முடியும்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை S.V.H.



இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்காக நடத்திய 'ஊடகமும் சமூகமும்' என்ற ஒருநாள் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்கள்.

'ஒன்றியத்தின்' யாழ். இணைப்பாளர் எஸ்.என்.திருச்செல்வம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் - ஒன்றியத்தின் பிரதிநிதி அ.நிக்ஷன் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றுவதைய இரண்டாவது படத்திலும் -

கருத்தரங்கை நடத்துவதற்கு அனுசரணை வழங்கிய 'விழுதுகள்' அமைப்பைச் சேர்ந்தவரும் அகவிழி சஞ்சிகையின் ஆசிரியருமான எஸ்.மதிசூதனன் பங்குபற்றிய ஊடகவியலாளர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.




# 4 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் உரிய பலனைத் தந்தனவா?

## இது குறித்து ஆராய நாளை கிளிநொச்சியில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.8

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் உரிய பலனைத் தரவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நிலை தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை கிளிநொச்சியிலுள்ள திட்டமிடல் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின் வடக்கு - கிழக்கில் சர்வதேச நிறுவனங்கள் மூலமும் மத்திய, மாகாண அரசு மூலமும் வழங்கப்பட்ட நிதிகளில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இத்திட்டங்கள் மூலம் பொதுமக்களுக்குப் பலன் ஏதும் கிட்டவில்லை எனப் பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நிலை தொடர்பாக ஆராய்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாளைய கூட்டத்தில் ஆராயப்படும்.

மக்களுக்குப் பயன்பெறக் கூடியவகையில் இத்திட்டங்களை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது குறித்து விரிவாக ஆராயப் படவிருக்கின்றது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த செயலகங்களின் திட்டப் பணிப்பாளர்களுக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கும் இக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (3-204-202)

# தேர்தல் பயிற்சி வகுப்புக்குச் சென்று காத்திருந்த அரச ஊழியர்கள்!

சாவகச்சேரி,நவ.8

தேர்தல் தொடர்பான பயிற்சி வகுப்பிற்குத் தாமதமாக வந்த சில உத்தியோகத்தர்கள் வகுப்பில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படவில்லை.

எதிர்வரும் தேர்தலில் வாக்கெடுப்பு நிலையங்களில் எழுதுநராகப் பணியாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றன.

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளப் பல உத்தியோகத்தர்கள் சற்றுத் தாமதமாகச் சென்றுள்ளனர். அவர்கள் அந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளத் தேர்தல் அதிகாரியால் அனுமதி மறுக்கப்பட்டது.

எனினும், நீண்டநேரம் வெளியில் காத்திருக்கவைத்து பிற்பகல் நடைபெற்ற 2 ஆவது அமர்வில் கலந்துகொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (3-31-202)




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற உள்ளூராட்சி வாரம் - 2005 நிறைவுநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.இராசையா, மாநகர சபையின் செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படங்கள். அருகில் மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் திருமதி ரஜனி ஆகியோர் அமர்ந்துள்ளனர். (படங்கள்: நல்லூர் செய்தியாளர்)

# தெல்லிப்பழை சுகாதார அதிகாரிக்கு 'பிக்கப்' வாகனம்

யாழ்ப்பாணம்,நவ.8

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்கென அவருக்குப் 'பிக்கப்' வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு சுகாதார அமைச்சால் இந்த வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமலே உள்ளன. இதன் காரணமாகச் சுகாதார அதிகாரி பல சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. இதற்கு வசதியாக இந்தப் 'பிக்கப்' வாகனம் வழங்கப்பட்டுள்ளது. (3-139-203)

# வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கு மனித உரிமை தினப் போட்டிகள்

வலி.தெற்கு,நவ.8

அடுத்த மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி பாடசாலை மாணவர் மத்தியில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி என்பவற்றை நடத்தி வெற்றிபெறும் மாணவர்களுக்கு அத்தினத்தில் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்க வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இதுதொடர்பாக அறிவித்தல் வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு போட்டியிலும் உள்ள பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்களையும் ஆக்கப் பிரதிகளையும் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

போட்டிகளில் முதலாம் இடம் பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசில்களாக வழங்கப்படும்.

இரண்டாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெண்கலப் பதக்கமும் சான்றிதழ்களுடன் பரிசில்களாக வழங்கப்படும்.

வலய ரீதியாக வெற்றி பெறுபவர்களுக்குப் பொருத்தமான சான்றிதழ்கள் வழங்கப் படும்.

ஒவ்வொரு போட்டியும் கனிஷ்ட பிரிவு (தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை), சிரேஷ்ட பிரிவு (தரம் 12, 13) என இரு பிரிவுகளாக நடைபெறும்.

கவிதைப் போட்டியில் கனிஷ்ட பிரிவு 'சிறுவர் உரிமைகள்' பற்றியும் சிரேஷ்ட பிரிவு 'பெண்கள் உரிமை' பற்றியும் எழுதப் படல்வேண்டும். (3-152)

# பொதி இறக்கிய தொழிலாளி காயம்!

தென்மராட்சி,நவ.8

பொதி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளியின் கால் மீது பார ஊர்தியின் சக்கரம் ஏறியது.

இச்சம்பவம் கடந்த சனியன்று முகமாலையில் இடம்பெற்றது.

கால் பாதம் நசியுண்டு காயமடைந்த மிருசுவில் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் ஜெயராசா (வயது 38) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (3-117)

# வேலணைப் பிரதேசத்தில் நடந்த சிறுவர்தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.8

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச செயலகம், பிரதேச எல்லைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தியது.

போட்டிகளில் முதல் 3 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

### கட்டுரை

**கீழ்ப்பிரிவு:** மு.கஜனி (நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தி.), கி.பிரசாந் (புங்குடுதீவு மகா வித்தி.), ரு.திரிபுரகஜன் (நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தி.).

**மத்தியபிரிவு:** யூஸ்வின் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), மு.ஆரிபா (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.), ம.சுஜிதன் (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.).

**மேற்பிரிவு:** உ.விதுஷா (நயினாதீவு மகா வித்தி.),அ.பாலேஸ்வரி (புங்குடுதீவு மகா வித்தி.), தி.தவேந்தினி (புங்குடுதீவு மகா வித்தி.).

### ஓவியம்

**கீழ்ப்பிரிவு:** ஜீ.ஜீவர்த்தனன் (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.), யோ. ஹம்சியா (செட்டிபுலம் அ.த.க. வித்தி.), சி.சிவகிருஷ்ணன் (வேலணை மண்கும்பான் அ.த.க. வித்தி.).

### சிறுவர் தினக் கவிதை

**கீழப்பிரிவு:** ஓ.கிருஷாயினி (நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட வித்தி.), செ.அமுதினி (சரவணை நாகேஸ்வரி வித்தி.), யோ. கஜானி (நயினாதீவு மகா வித்தி.).

**மத்திய பிரிவு:** சி.கோபிநாதன் (நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட வித்தி.), யோ. மனோகரன் (சரவணை நாகேஸ்வரி வித்தி.), சி.சிந்துஜா (நயினாதீவு மகா வித்தி.).

**மேற்பிரிவு:** ஓ.தாட்சாயினி (நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட வித்தி.), ச.ஜெஸ்மின் ஜெலஸ்ரினா (புங்குடுதீவு மகா வித்தி.).

### முதியோர் தினக் கவிதை

**கீழ்ப்பிரிவு:** ப.கஸ்தூரி (நயினாதீவு மகா வித்தி.), அ.சுரேக்கா (சரவணை நாகேஸ்வரி வித்தி.), க.விஜிதரூபி (நயினாதீவு மகா வித்தி.).

**மத்திய பிரிவு:** மு.ஆரிபா (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.), பு.கஜானிசலா (நயினாதீவு மகா வித்தி.), யோ.கோபிகா (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.).

**மேற்பிரிவு:** ப.ஜீவநந்தா (நயினாதீவு மகா வித்தி.), ச.சுவர்ணா (புங்குடுதீவு மகா வித்தி.).

### முதியோர் தினக் கட்டுரை

**கீழ்ப்பிரிவு:** ரு.உசாவினி (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.), இ.தர்மினி (சரவணை நாகேஸ்வரி வித்தி.), ப.புராதனி (நயினாதீவு மகா வித்தி.).

**மத்திய பிரிவு:** ஜெ.ஜெனிற்றா (நயினாதீவு மகா வித்தி.), ம.கினித்தா (நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி.), ப.தமிழினி (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.).

**மேற்பிரிவு:** வி.விஜயதீபா (நயினாதீவு மகா வித்தி.), யோ.மேரி உதயந்தினி (புங்குடுதீவு மகா வித்தி.).

(3-202)

# செவ்விளநீர் பிடுங்க ஏறிய சிறுவன் வீழ்ந்து காயம்!

தென்மராட்சி,நவ.8

செவ்விளநீர் பிடுங்க மரத்தில் ஏறிய சிறுவன் தவறி வீழ்ந்ததில் இடுப்பில் காயமேற்பட்டது. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ.கஜன் (வயது 12) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-117)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். மன்னார் உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரில் எஞ்சியோரின் பெயர்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 38ம/98 | திரு. செல்லையா நடராசா |
| 39ம/100 | திரு. சின்னத்துரை உலகநாதன் |
| 40ம/103 | திரு. டேவிற் அந்தோனிப்பிள்ளை |
| 41ம/106 | திரு. தம்பிராசா சரவணமுத்து |
| 42ம/107 | திரு. சின்னையா சிவஞானம் |
| 43ம/108 | திரு. சீமான்பிள்ளை கிறிஸ்ரியன் |
| 44ம/109 | திருமதி. மாணிக்கம் சண்முகநாதன் |
| 45ம/113 | திருமதி. மரியகொரற்றி ஞானசிங்காரம் |
| 46ம/114 | திரு. நீக்கிலாப்பிள்ளை சீமான்பிள்ளை |
| 47ம/116 | திரு. ஐயம்பிள்ளை வீரவாகு |
| 48ம/117 | திரு. சண்முகம் தருமலிங்கம் |
| 49ம/122 | திரு. சுவக்கின் பிரான்சிஸ் |
| 50ம/125 | திரு. செல்லத்தம்பி ரவி |
| 51ம/128 | திரு. அகுஸ்தின் யுவானி |
| 52ம/130 | திரு. அடைக்கலம் அந்தோனிப்பிள்ளை |
| 53ம/132 | திருமதி. நாகரத்தினம் முருகேசு |
| 54ம/134 | திரு. வினாசித்தம்பி முத்துலிங்கம் |
| 55ம/136 | திரு. அந்தோனிப்பிள்ளை பிறேமரட்ணம் |
| 56ம/137 | திரு. கார்த்திகேசு சேதுகாவலர் |
| 57ம/138 | திருமதி. அன்னலட்சுமி பாலசுப்பிரமணியம் |
| 58ம/139 | திருமதி. திலகவதி தர்மலிங்கம் |
| 59ம/141 | திரு. மார்க்கண்டு பஞ்சலிங்கம் |
| 60ம/142 | திருமதி. நாகேஸ்வரி சிவகுருநாதன் |
| 61ம/146 | திருமதி. சறோஜினிதேவி சின்னத்துரை |
| 62ம/147 | திரு. அந்தோனி டோமினிக் |
| 63ம/149 | திரு. தேவசகாயம் பங்கிராசா |
| 64ம/150 | திருமதி. வரதலட்சுமி தங்கராசா |
| 65ம/151 | திரு. அருணாசலம் சரவணமுத்து |
| 66ம/154 | திருமதி. தர்மபூபதி கனகரத்தினம் |
| 67ம/155 | திரு. யக்கோப்பிள்ளை சவேரியான் |
| 68ம/158 | திரு. இராசவாகர் காசிநாதன் |
| 69ம/159 | திரு. பொன்னம்பலம் கனகலிங்கம் |
| 70ம/160 | திரு. யக்கோப்பிள்ளை சலமோன் |
| 71ம/161 | திரு. முத்துக்குமாரு குணசிங்கம் |
| 72ம/163 | திருமதி. தனலெட்சுமி தில்லையம்பலம் |
| 73ம/164 | திருமதி. சீதேவிப்பிள்ளை இராமசேது |
| 74ம/166 | திருமதி. விஜயலட்சுமி பத்மநாதன் |
| 75ம/169 | திருமதி. தவமலர் தியாகராஜா |
| 76ம/170 | திரு. சவரிமுத்து சகாயநாதன் |
| 77ம/171 | திரு. பிறகாசம் பங்கிராசா |
| 78ம/187 | திருமதி. கேதீஸ்வரி நாகலிங்கம் |
| 79ம/188 | திரு. சரவணமுத்து இலங்கராசன் |
| 80ம/194 | திரு. மயில்வாகனம் நாகேந்திரன் |
| 81ம/195 | திருமதி. பொன்னம்மா வேலாயுதம் |
| 82ம/196 | திரு. மனுவேல்பிள்ளை சாள்ஸ்யோசப் |
| 83ம/197 | திரு. பொன்னுத்துரை கியோமராசா |
| 84ம/198 | திரு. செபராசா ஸ்ரிவின்சன் |
| 85ம/199 | திரு. லூக்காஸ் பிரேமதாஸ் |
| 86ம/201 | திரு. சிலுவைராசா ஸ்ரனிஸ்லஸ் |
| 87ம/202 | திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் |
| 88ம/205 | திரு. சாமிநாதன் யோன்கெனற் |
| 89ம/206 | திரு. சந்தியோகு யேசுதாசன் |
| 90ம/208 | திரு. அப்புத்துரை பத்மநாதன் |
| 91ம/209 | திரு. சவரிமுத்து பிரான்சிஸ் ஜேசுதாசன் |
| 92ம/210 | திரு. சந்தியோகு அந்தோனிசம்பாய்வ |
| 93ம/211 | திரு. சிமியோன்பிள்னை தமியான்பிள்ளை |
| 94ம/213 | திரு. யோசேப் செல்வம்கொடுதோர் |
| 95ம/214 | திரு. தங்கையா சகாயசீலன் |
| 96ம/215 | திரு. பெனடிற்பத்திரனார் ஜெயஜீவகயோசப் |
| 97ம/216 | திரு. வேலு செல்வநாயகம் |
| 98ம/217 | திரு. மரியதாசன் றொபேட் |
| 99ம/218 | திருமதி. ஜெனோவா பார்த்தசாரதி |
| 100ம/223 | திரு. யோன்பிள்ளை எமலியூஸ் |
| 101ம/224 | திரு. சுப்பிரமணியம் தேவராசா |
| 102ம/226 | திரு. கனகரத்தினம் ஐயாத்துரை |
| 103ம/227 | திரு. கறுப்பையா கோவிந்தசாமி |
| 104ம/228 | திரு. ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் |
| 105ம/229 | திரு. மரியதாஸ் ஜேம்ஸ் |
| 106ம/231 | திரு. அந்தோனிமுத்து அல்பிரட் |
| 107ம/234 | திரு. சந்திரசேகரம் வையித்திலிங்கம் |
| 108ம/236 | திரு. நடராஜன் சுந்தரராஜன் |
| 109ம/237 | திரு. சூசைப்பிள்ளை அன்ரன் |
| 110ம/238 | திரு. அந்தோனி மத்தியூஸ் தொடுதோர் |
| 111ம/239 | திருமதி. அந்தோனியம்மா சந்தியோகு |
| 112ம/247 | திரு. வல்லிபுரம் கணேந்திரன் |
| 113ம/248 | திரு. வயிரவநாதர் சோதிலிங்கம் |
| 114ம/249 | திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதம் |
| 115ம/251 | திரு. செல்லத்துரை சின்னத்தம்பி |
| 116ம/252 | திரு. பெர்ணான்டோ இம்மானுவேல் |
| 117ம/254 | திரு. ஞானப்பிரகாசம் யோசப் |
| 118ம/255 | திரு. அந்தோனிமுரால் பத்திநாதன் |
| 119ம/259 | திரு. அமிர்தநாதர் அந்தோனி |
| 120ம/260 | திருமதி. சேதுராணி நடராசா |
| 121ம/261 | திருமதி. குணவதி திருநாவுக்கரசு |
| 122ம/266 | திரு. தம்பு பாலசுப்பிரமணியம் |
| 123ம/267 | திருமதி. நித்தியானந்தேஸ்வரி தியாகரன் |
| 124ம/268 | திரு. சூசை முடியப்பு |
| 125ம/269 | திரு. கணபதிப்பிள்ளை ருத்திரகுமார் |
| 126ம/273 | திரு. கந்தையா நடராஜா |
| 127ம/274 | திரு. செல்லத்துரை நடராசா |
| 128ம/277 | திரு. செல்லத்துரை சண்முகநாதன் |
| 129ம/278 | திரு. அருணாசலம் பொன்னுத்துரை |
| 130ம/282 | திரு. விசுவநாதர் இராசரத்தினம் |
| 131ம/284 | திரு. அம்பலவாணர் குகதாசன் |
| 132ம/285 | திரு. பொன்னுச்சாமிமுதலியார் சுந்தரராஜ் |
| 133ம/292 | திரு. முருகேசு தவபாஸ்கரன் |
| 134ம/293 | திரு. குமாரு செல்வராசா |
| 135ம/294 | திரு. சின்னையா பத்மநாதன் |
| 136ம/295 | திரு. நீக்கிலஸ் இராஜசூரியர் |
| 137ம/296 | திரு. சாமிநாதஐயர் நிவிர்த்திசாதுசர்மா |
| 138ம/300 | திருமதி. நேசராணி அலெக்ஸ்சாண்டர் |
| 139ம/301 | திரு. சின்னையா அம்பிகைபாகுதேவன் |
| 140ம/304 | திரு. நீக்கிலாப்பிள்ளை செபரட்ணம் |
| 141ம/305 | திரு. அறுங்காஞ்சி மாணிக்கராசா |
| 142ம/310 | திருமதி. மேரிசாந்தி வரப்பிரகாசம் |
| 143ம/311 | திருமதி. புஸ்பவதி அன்னலிங்கம் |
| 144ம/313 | திரு. மரியதாஸ் அல்போன்ஸ் |
| 145ம/318 | திரு. மிக்கேல் தோமாஸ் |
| 146ம/320 | திரு. முத்துக்குமார் கனகசிங்கம் |
| 147ம/325 | திரு. ஐயாத்துரை ஜோதிநாதன் |
| 148ம/326 | திரு. வயிரமுத்து அருள்ராஜன் |
| 149ம/327 | திரு. யோசேப் றொபெட்சில்வா |
| 150ம/330 | திருமதி. செபமாலைமரியை கிறிஸ்தோகு |
| 151ம/332 | திரு. முத்தையா திருநாவுக்கரசு |
| 152ம/333 | திரு. மாதாடிமை யோண்மார்க்கு |
| 153ம/334 | திரு. பிரகாசம் இராஜேந்திரா |
| 154ம/335 | திரு. சந்தியோகு செபமாலைசம்பாய்வ |
| 155ம/339 | திரு. சூசைப்பிள்ளைஅன்ரனிஸ் இராசநாயகம் |
| 156ம/342 | திரு. சிமியோன் யேசுதாசன் |
| 157ம/350 | திருமதி. மேரியூக்கநிஸ்ரா மிக்கேல்சில்வா |
| 158ம/351 | திரு. பொன்னம்பலம் இராமநாதன் |
| 159ம/352 | திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் |
| 160ம/353 | திருமதி. சிவஞானேஸ்வரி கனகசுந்தரம் |
| 161ம/355 | திரு. அருணாசலம் ஐயம்பிள்ளை |
| 162ம/359 | திரு. மாரிமுத்து நடராசா |
| 163ம/360 | திரு. பொன்னர் கந்தையா |
| 164ம/362 | திருமதி. சிவமலர் ஈஸ்வரன் |
| 165ம/367 | திரு. இராசையா சிவநாதன் |
| 166ம/368 | திரு. இராசையா விவேகானந்தன் |
| 167ம/371 | திருமதி. யசிகலா இராஜேந்திரன் |
| 168ம/372 | திரு. இராசையா இராசரத்தினம் |
| 169ம/373 | திரு. தம்பிப்பிள்ளை சேகர் |
| 170ம/376 | திரு. இரத்தினம் பரமேஸ்வரன் |
| 171ம/377 | திருமதி. பரமேஸ்வரி ஆனந்தராஜ் |
| 172ம/381 | திருமதி. சித்திரா சாந்தலிங்கம் |
| 173ம/382 | திரு. இராசையா பத்மநாதன் |
| 174ம/383 | திரு. சபாபதி பால்ராசா |
| 175ம/384 | திரு. கார்த்திகேசு கனகராசா, |
| 176ம/387 | திருமதி. புவனேஸ்வரி யோகராசா |
| 177ம/388 | திருமதி. ஞானகுமாரி திருஞானம் |
| 178ம/390 | திரு. செபஸ்தியாம்பிள்ளை வேதராசா |
| 179ம/393 | திரு. வேலன் இரத்தினம் |
| 180ம/394 | திரு. செல்லையா பஞ்சலிங்கம் |
| 181ம/395 | திரு. விசுவநாதர் பாலசுப்பிரமணியம் |
| 182ம/400 | திரு. கணபதி செல்வராசா |
| 183ம/402 | திருமதி. சிவபாக்கியம் செல்வராசா |
| 184ம/404 | திருமதி. சோதிமலர் தர்மலிங்கம் |
| 185ம/405 | திருமதி. இரத்தினபூபதி கந்தையா |
| 186ம/408 | திரு. நல்லையா மனோகரன் |
| 187ம/410 | திரு. சண்முகலிங்கம் ஜெகதீசன் |
| 188ம/411 | திரு. கந்தையா இராமசேது |
| 189ம/412 | திரு. முத்துக்குமார் இளசிங்கம் |
| 190ம/413 | திரு. விஸ்வலிங்கம் மல்லிகாந்தன் |
| 191ம/414 | திரு. அகஸ்ரீன் சீமான் |
| 192ம/420 | திரு. செல்வராசா சிவனடியான் |
| 193ம/421 | திருமதி. எமெல்டா கஸ்துலப்பர் |
| 194ம/423 | திருமதி. றெஜி பத்மநாதன் |
| 195ம/424 | திரு. சவேரியான் சூசைதாஸ் |
| 196ம/425 | திரு. சுவக்கின் ஏசடியான் |
| 197ம/426 | திரு. கனகசபை ஜெகதீஸ்வரன் |
| 198ம/428 | திருமதி. கிறிஸ்ரீனா வலத்திசார் |
| 199ம/431 | திரு. பெனடிக்ற் அலோசியஸ் பிறேமதாசன் |
| 200ம/435 | திரு. சவுரி பிலிப்புநேரிஸ் |
| 201ம/436 | திருமதி. மேரிதிரேசா யோகநாதன் |
| 202ம/437 | திரு. சந்தாம்பிள்ளை கோமதாஸ் |
| 203ம/441 | திரு. மத்தியாஸ் பிலிப்பு |
| 204ம/446 | திருமதி. சிவபாக்கியம் நாகலிங்கம் |
| 205ம/447 | திரு. நாகலிங்கம் தம்பிராஜா |
| 206ம/449 | திரு. அந்தோனிப்பிள்ளை மத்தேஸ்பிள்ளை |
| 207ம/450 | திரு. அந்தோனி அருட்பிரகாசம் |
| 208ம/451 | திரு. அந்தோனிமுத்து அமிர்தசிங்கம் |
| 209ம/454 | திருமதி. மேரிறீற்றம்மா அலோசியஸ் |
| 210ம/456 | திரு. செபமாலை யேசுதாசன் |
| 211ம/457 | திரு. யோசேப் யோஜ்ராசா |
| 212ம/458 | திரு. கந்தையா வீரசிங்கம் |
| 213ம/459 | திரு. வல்லிபுரம் பத்மநாதபிள்ளை |
| 214ம/460 | திரு. மனுவேற்பிள்ளை செபமாலை |
| 215ம/461 | திரு. செபமாலை மனுவல்டபறேரா |
| 216ம/463 | திரு. சிங்கராயர் அந்தோனிலோகு |
| 217ம/464 | திரு. சிவபாக்கியம் பிரான்சிஸ் |
| 218ம/466 | திரு. திருச்செல்வம் செபமாலை லெம்பேட் |
| 219ம/467 | திரு. வயிரவநாதர் வன்னியசிங்கம் |
| 220ம/469 | திரு. துரையப்பா தர்மலிங்கம் |
| 221ம/470 | திரு. சோலையப்பன் இராமன் |
| 222ம/471 | திரு. செபமாலை சூசைநாயகம் |
| 223ம/474 | திரு. சேவியர் பிரான்சிஸ் |
| 224ம/475 | திரு. சந்தான் பிலேம்திரன் |
| 225ம/476 | திரு. யோன் செபமாலைமரியநாயகம் |
| 226ம/477 | திருமதி. மேரிஅக்னஸ் ஆனந்தராசா |
| 227ம/478 | திரு. தேவதாசன் திவ்வியதாசன் |
| 228ம/483 | திரு. செல்லையா அன்ரனிஸ் |
| 229ம/484 | திரு. வயிரவநாதர் சிவபாலன் |
| 230ம/486 | திரு. நீக்கிளான் மரியநாயகம் |
| 231ம/488 | திருமதி. லூர்துமலர் செல்வராசா |
| 232ம/490 | திரு. இராசதுரை பொன்னம்பலம் |
| 233ம/491 | திரு. அந்தோனிப்பிள்ளை அல்வின் |
| 234ம/494 | திரு. இராசையா திருச்சிற்றம்பலம் |
| 235ம/498 | திருமதி. அலோசியாமேரிமொனிக்கா யோசெவ் மரியநாயகம் |
| 236ம/499 | திரு. யோசப் ஜோர்ச் |
| 237ம/502 | திரு. யேசுதாசன் ஜெயரட்ணம் |
| 238ம/503 | திரு. செபமாலை அருள்நேசம் |
| 239ம/504 | திரு. சவரிமுத்து முடியப்பன் (ஸ்ரீபன்) |
| 240ம/505 | திரு. தேவசகாயம் ஆபிரகாம் |
| 241ம/508 | திரு. இராசையா கிறிஸ்தோப்பர் |
| 242ம/509 | திரு. கனகரெத்தினம் வாரித்தம்பி |
| 243ம/510 | திரு. தம்பிராசா மனோகரன் |
| 244ம/512 | திரு. கறுப்பையர் செல்வகுமார் |
| 245ம/513 | திரு. பாக்கியம் கருணைராஜா |
| 246ம/515 | திரு. சூசை அருளப்பு |
| 247ம/518 | திரு. பெஞ்சமின் றோமவால் |
| 248ம/520 | திரு. அந்தோனிப்பிள்ளை ரவி |
| 249ம/522 | திரு. நசரேத் சூசையப்பு லெம்பட் |
| 250ம/525 | திரு. முத்தையர் அரிச்சந்திரன் |
| 251ம/526 | திரு. முருகேசு கந்தையா |
| 252ம/528 | திரு. அந்தோனிப்பிள்ளை ஜோர்ச் செல்வராசா |
| 253ம/529 | திரு. ஐயம்பிள்ளை மதியாபரணம் |
| 254ம/531 | திரு. யக்கோவு அந்தோனி |
| 255ம/533 | திரு. சிமியோன் சூசைநாயகம் |
| 256ம/534 | திருமதி. அந்தோனிக்கம்மா மருசிலீன் |
| 257ம/535 | திரு. சரவணை கணேசன் |
| 258ம/541 | திருமதி. அங்கயற்கண்ணி சதாசிவம் |
| 259ம/542 | திரு. ஆறுமுகம் மருதை |
| 260ம/544 | திரு. செல்வரத்தினம் பத்திராசன் |
| 261ம/545 | திரு. சங்கரப்பிள்ளை ரவிச்சந்திரன் |
| 262ம/550 | திரு. அபுறாம்பிள்ளை அன்ரன் |
| 263ம/551 | திரு. அம்பலவாணர் நாகலிங்கம் |
| 264ம/552 | திரு. கணபதிப்பிள்ளை புலேந்திரராஜன் |
| 265ம/553 | திரு. முத்தையா சிறிகாந்தன் |
| 266ம/558 | திரு. நடேஸ் காசிராசா |
| 267ம/559 | திரு. ஆறுமுகம் சூரியகுமார் |
| 268ம/561 | திரு. பிலிப்பு செலஸ்ரீன் அருளப்பு |
| 269ம/563 | திரு. பிலிப்பு பத்திநாதன் |
| 270ம/564 | திரு. சூசை பிரான்சிஸ் சேவியர் |
| 271ம/565 | திரு. தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம் |
| 272ம/566 | திரு. கணபதிப்பிள்ளை சண்முகராசா |
| 273ம/568 | திரு. இரத்தினசிங்கம் கேதீஸ்வரநாதன் |
| 274ம/571 | திரு. அருளானந்தம் அன்ரன் |
| 275ம/574 | திரு. அவுராம்பிள்ளை சந்திரசேகரம் |
| 276ம/575 | திரு. மருதப்பு சண்முகநாதன் |
| 277ம/580 | திரு. அந்தோனி செபஸ்தியான்பீரிஸ் |
| 278ம/583 | திரு. அந்தோனி யேசுதாசன்பீரிஸ் |
| 279ம/584 | திரு. காமாட்சி ராஜதுரை |
| 280ம/585 | திரு. வெள்ளையன் இலங்கராசு |
| 281ம/587 | திரு. அலோசியஸ் இருதயதாசன்லோகு |
| 282ம/589 | திரு. பிலிப்பு எமலியன்ஸ்சில்வா |
| 283ம/591 | திரு. பிலுப்புப்பிள்ளை கிறேசியன் |
| 284ம/592 | திரு. அந்தோனி ஞானசீலன்கொடுதோர் |
| 285ம/593 | திரு. குப்புசாமி கணேசலிங்கம் |
| 286ம/594 | திரு. செல்லன் இந்திரராஜா |
| 287ம/598 | திரு. செபமாலை பிரான்சிஸ் |
| 288ம/602 | திரு. செல்வம் ரகுநாதன் |
| 289ம/606 | திரு. பிலிப்புப்பிள்ளை சந்தாம்பிள்ளை |
| 290ம/607 | திரு. சந்தான் சில்வேந்திரன் |
| 291ம/608 | திரு. செபஸ்தியாம்பிள்ளை சகாயசீலன் |
| 292ம/610 | திரு. சந்தாம்பிள்ளை நவரெட்ணம் |
| 293ம/613 | திரு. அந்தோனி சந்தான் |
| 294ம/614 | திரு. தொம்மை அந்தோனிப்பிள்ளை |
| 295ம/615 | திரு. சூசை செபஸ்ரியான் |
| 296ம/616 | திரு. அந்தோனி சூசைப்பிள்ளைகொடுதோர் |
| 297ம/617 | திருமதி. திரேசா கணேசபிள்ளை |
| 298ம/621 | திரு. ஏனோக்கு ஞானசவுந்தரம் |
| 299ம/622 | திரு. ஞானசேகரம் கமலநாதன் |
| 300ம/623 | திருமதி. விஜயகுமாரி ஜெபராஜசிங்கம் |
| 301ம/624 | திருமதி. பிறேமராணி ஜேசுதாசன் |
| 302ம/625 | திருமதி. மரியை வேதநாயகம் |
| 303ம/628 | திரு. மனுவேல் சந்தான் |
| 304ம/630 | திரு. மரியாம்பிள்ளை சிங்கராசா |
| 305ம/631 | திரு. அந்தோனி பர்னாந்து |
| 306ம/632 | திரு. செபமாலை டேவிற்டபரேரா |
| 307ம/633 | திரு. கயித்தான் பர்ணபாஸ் |
| 308ம/634 | திரு. மடித்தீன் யேசுதாசன் |
| 309ம/636 | திருமதி. செபஸ்தியம்மா அந்தோனிப்பிள்ளை |
| 310ம/639 | திரு. சவரிமுத்து சாந்தப்பர்லீயோன் |
| 311ம/641 | திரு. மனுவேல் மரியதாசன் |
| 312ம/645 | திரு. பிரான்சிஸ்பிள்ளை தியோகுப்பிள்ளை |
| 313ம/646 | திரு. செபமாலை சந்தியாகு |
| 314ம/647 | திரு. யோவான் பெனாண்டோ |
| 315ம/649 | திரு. செபமாலைப்பிள்ளை கிரகோரிப்பிள்ளை |
| 316ம/653 | திரு. அந்தோனி சந்தான் கொடுதோர் |
| 317ம/655 | திரு. அதிரியாம்பிள்ளை அன்ரன் |
| 318ம/656 | திரு. பிலிப்பு அந்தோனிபீரிஸ் |
| 319ம/658 | திரு. யேசுதாசன் லெயோனாட்பறுனாந்து |
| 320ம/659 | திரு. சேவியர் காணிக்கைநாதன் சூஞ்ஞன் |
| 321ம/661 | திரு. யோவான் யேசுசகாயம் |
| 322ம/666 | திரு. ஆரோக்கியம் சிந்தாத்துரை |
| 323ம/667 | திரு. இராமலிங்கம் இராமதுரை |
| 324ம/668 | திரு. சந்தியாப்பிள்ளை செல்வநாயகம்பிள்ளை |
| 325ம/669 | திரு. செபமாலை யேசுதாசன்குரூஸ் |
| 326ம/670 | திரு. தோமஸ் கொன்சால்லீயோன் |
| 327ம/673 | திரு. வெள்ளைச்சாமி செல்வரெத்தினம் |
| 328ம/674 | திரு. உவில்லியம் அன்ரன்பாலேந்திரராஜ் |
| 329ம/676 | திருமதி. சூசையம்மா சந்தாம்பிள்ளை |

(09ஆம் பக்கம் பார்க்க)

# ஆரம்பக் கல்வியே வாழ்வின் அடித்தளம் இதனை உணர்வது அனைவரதும் பொறுப்பு

கல்வி, மனிதவள மேம்பாட்டிற்கும், மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைகிறது. எனவே, திருவள்ளுவர் கூறும் போது ''ஒருவருடைய அழிவில்லாத செல்வம் கல்வியே! அதைத்தவிர ஏனையவை அத்தகைய சிறப்புடையவையல்ல'' என்றார். எண்ணும் எழுத்தும் கண்ணென சொல்வாரும் உளர். கண்ணுடையோர் கற்றோர் மற்றோர் பின்னுடையர் என்பர் சிலர். எதிர்காலத்தில் நெறிபிறழாது வாழ கல்வி மிக உறுதுணையாக அமைகிறது.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. எனவே, ஆரம்பக்கல்வியை ஆணித்தரமான எமது மூளையில் ஏற்ற வேண்டும். ஒவ்வொரு நாடும் தனது வருமானத்தின் பெரும் பகுதியை கல்வி வளர்ச்சிக்காகச் செலவிடுகிறது. இலங்கையில் நாட்டு வருமானத்தின் 20 வீதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. எமது நாட்டில் கல்வியறிவு பெற்றவர்கள் 85 வீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

''கல்'' என்பதன் வினையடியாகப் பிறந்தது தான் கல்வி. கல்லி எடு அல்லது தோண்டியெடு என்ற பொருளுடைய கல்வியால் குழந்தைகளின் உள் செறிந்து இருக்கும் திறமை, ஆற்றல் என்பன வெளிக்கொணரப்பட்டு விருத்திசெய்யப்படும். (கல்+வி) இலங்கையில் இலவசக்கல்வி முறைமை பலரையும் கல்வி கற்கத் தூண்டியுள்ளது. ஆரம்பக் கல்வி என்பது தரம்-1 இலிருந்து தரம் 5 வரை கற்பிக்கப்படும் கல்வியாகும்.

### மனிதத் தன்மைபெற கல்வி உதவி செய்யும்

ஆரம்ப வகுப்புகளில் மாணவர் மனதில் செறியும் நற்பண்புகள் அவர்கள் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரிகளாகப் பரிணமிக்கும் வரை தொடர வேண்டும்.

## சுய ஆற்றல், சுய சிந்தனைக்கும் வாய்ப்புகள் வழங்கவேண்டும்

ஆரம்ப வகுப்புகளில் சிறு விதைகளாக விதைக்கப்படும் பண்புகள் அவர்கள் வளர்ந்ததும் பண்புள்ளவர்களாக மிளிரச் செய்கிறது. ஆங்கிலக் கவிஞர் வேட்ஸ்வேர்த் கூறும் போது '' மனிதத் தன்மையினை மனிதர் பெறத்துணையாக விளங்குவது கல்வி'' என்றார். இன்று பாடசாலையில் மனிதத்தன்மையினைப் பெற ஆரம்பக்கல்வியில் இருந்து கல்வி துணையாக விளங்குகிறது எனலாம். ''கேடில் விழு செல்வம் கல்வியாகும்.'' ''கற்கை நன்றே''. ''கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்று எம்மவர் கல்விக்குக் கூடிய நாட்டம் செலுத்தினர்.

கடமை கண்ணானது என்பதை அவர்களுக்கு உணர்த்தி நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கும் ஒழுக்க விருத்திக்கும் கட்டுப்பாட்டிற்கும் ஆரம்பக்கல்வி உதவ வேண்டும். மொத்தமாக 5 வயது தொடக்கம் 14 வயதிற்குட்பட்ட 25 ஆயிரத்து 532 பிள்ளைகள் (14.30 சதவீதம்) பாடசாலைக்குச் செல்வதில்லை. இவற்றில் 60.3 சதவீதப் பிள்ளைகள் (15 ஆயிரத்து 42) விவசாய, கைத்தொழில், வியாபார நிலையங்களில் வேலை செய்கின்றனர். வேலை செய்வோரில் 22.2 சதவீத சிறார்கள் ரூ.2000/- குறைய மாதாந்தம் உழைக்கின்றனர். 14 வயதுக்குட்பட்டோரை வேலைக்கு அமர்த்துவது சட்டபூர்வமான குற்றமாகும். எனவே, இவர்களையும் ஆரம்பக்கல்வியைப் பெறுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

ஒருவருடைய வாழ்க்கையில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தி அவனைச் சமூகத்தோடு பின்னிப்பிணைப்பதும் கல்வியே. சமுதாயத்திற்குரிய பண்பாட்டு மரபினை கல்வி இளம் தலைமுறையினருக்கு உணர்த்துகின்றன. புதுக்கருத்துகள், புத்தூக்கங்கள் ஆகியன கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுதலை அளிக்கின்றன. எனவே, கல்வி தனியார் ஆளுமையை வளர்ப்பதோடு, சமூக வாழ்வையும் தொடர்புபடுத்துவதாக உள்ளது. இன்று உலகில் பணக்கார நாடாகப் புகழப்படும் ஐக்கிய அமெரிக்காவில் ஐந்தில் ஒருபிள்ளை வறுமை நிலையிலுள்ளார். அங்கு 22.4 சதவீத பிள்ளைகள் வறியவர்கள். ஆனால், சுவீடனில் முப்பத்தெட்டு பிள்ளை களில் ஒரு பிள்ளை வறியவர். இங்கு 2.6 சதவீதமான பிள்ளைகள் தான் வறியவர்கள். டென்மார்க்கில் இருப்பதில் ஒரு பிள்ளை தான் வறியவர். இங்கு 5.1 சதவீத பிள்ளைகளே வறியவர்கள்.

எனவே, வறியவர்களது பிள்ளைகளை பாரபட்சம் காட்டாது நாம் ஆரம்பக்கல்வியில் புகுத்த முற்பட வேண்டும். வறியவர்கூட தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப உதவவேண்டும். இதற்கு எமது நாட்டில் இலவசக் கல்வி முறையுள்ளதால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பக் கட்டாயப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் வெளிநாடு செல்வோரின் தொகை அதிகரித்துள்ளது. இப்படி வெளிநாடு சென்ற பெற்றோரின் சிறுவர்கள் அரவணைப்பு, அன்பு, பாதுகாப்பு என்பனவற்றால் தவிப்பதுடன், உளவியல் அழுத்தங்களுக்குட்படுகின்றார்கள். எனவே இவர்களது பாதுகாவலர்கள் கட்டாயம் இவர்களைப் பாட சாலைக்கு அனுப்பி ஆரம்பக் கல்வியைப் பயில உதவ வேண்டும்.

### குழந்தையின் எதிர்காலம் குறித்து கனவு காணும் பெற்றோர்

குழந்தை ஒன்று பிறக்கும் போது அதன் எதிர்காலம் குறித்து பெற்றோர் பலவாறாகக் கனவு காண்கின்றனர். தமது வாழ்விலும் பார்க்க அவர்களது வாழ்வு சிறப்பாக அமைய அங்கலாய்க்கின்றனர். குழந்தை கருவிலிருக்கும் போதே தாயானவள் ஆசைக் கனவுகள் காண்கின்றாள். தான் ஈன்ற பிள்ளை கல்வி, கேள்விகளால் நிறைவடைகின்றான் என பிறர் சொல்லக் கேட்பதே தாயின் தலையாய பொறுப்பாகும். ''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்றார் திருவள்ளுவர்.

சொ.அமிர்தலிங்கம் B.A. (Hons)
ஆளுநரின் செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

பிள்ளைகளின் மேன்மைக்காகப் பல பெற்றோர் பல பிரயத்தனங்களைச் செய்கின்றனர். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக திரை கடல் ஓடியும் திரவியம் தேட முற்படுகின்றனர். மகாகவி பாரதியாரின் பாடல்களில் நாட்டங்கொண்ட விபுலானந்த அடிகளார் பாடசாலைகளில் குழந்தைகளுக்கு வகுப்பிற்கேற்ப பாடல்களைத் தெரிந்தெடுத்தார். முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு செந்தமிழ் நாடெனும் போதினிலே...... என்னும்

2ஆம், 3ஆம், 4ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் காக்கைச்சிறகினிலே என்னும்- 5ஆம் வகுப்பிற்கு பகைவனுக்கருள் வாய் நன்னெஞ்சே என்னும்- 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வீரசுதந்திரம் வேண்டி நின்றார் என்ற வகையிலும் கற்பிக்க வழியமைத்தார். கலையும், அறிவியலும் ஒருங்கு சேர்ந்த கல்வியைப் புகட்ட முற்பட்டார்.

பிள்ளைகளை எதிர்காலத்தில் சான்றோன். எனக் கேட்க விரும்பிய பலர் இன்று பிள்ளைகள் நிறையப் பொருள் சம்பாதிக்க வேண்டும். ஏனைய போட்டியிடுவோர் அனைவரையும் வெல்ல வேண்டும். ஏனையவர்களிலும் பார்க்க உயர்ந்து ஸ்தா த்தைப் பெற வேண்டும் என்றும் அவாவுறுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம்போட்டிப் பரீட்சைகள். இதில் பலரை முந்த வேண்டும் என முனைப்புடன் செயற்படுவதால் தனியார் வகுப்புக்களைக் கூட நாடுகின்றனர். இங்கு பரீட்சை என்பதை அடிப்படையாகக் கொள்வதால் மனப்பாடம் முக்கியம்பெறுகிறது. எனினும் இவர்களது சுய ஆற்றலை, சுய சிந்தனையை வளர்க்க முன்வர வேண்டும்.

தேவைக்கு அதிகமான பாடக்குறிப்புகள் அவசர அவசரமாக வழங்குவதையும், அவை பிள்ளைகளால் கிரகிக்கப்படாது எழுதப்படுவதால், பொருளுணராது மனப்பாடம் செய்யப்படுவதால், மாணவர் உள்ளத்தில் ஒளி பெற மாட்டாது. இதனை மாணவர்கள் பாடக்குறிப்புக்களால் நிரப்பப்படும் பாத்திரதாரியாகின்றனர். எனவே, கிரகித்தலை வளர்த்து, இதன் மூலம் ஆரம்பம் வளர கல்வித்திட்டம் அமைய வேண்டும். ஆரம்பக் கல்விக்கு கிரகித்தல் ஆணிவேராகும்.

குழந்தைப்பருவத்தில் பிள்ளைகள் நினைப்பதை விட நாம் பிள்ளைகளின் மனதில் தேவைக்கு அதிகமானவற்றைத் திணிப்பதால், பிள்ளைகளின் மூளைத்திறனும், அவர்களின் ஆற்றலும் வளர்ச்சியடைவதில் தடைகள் ஏற்படலாம். நாட்டின் எதிர்கால கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால் பிள்ளைகளை முன் பள்ளிக்கு அனுப்பவேண்டியது அவசியமாகும். பாடசாலைக்குச் செல்லும் 67 வீதமான மாணவர்களில் 35 வீதமான மாணவர்களே முன்பள்ளிக்குச் செல்கின்றனர். எனவே, ஆரம்பத்தில் முன்பள்ளியில் அனைவரும் படித்து பின் ஆரம்பக்கல்வியைப் பெற வழியமைக்க வேண்டும். இதனால் மூளைத்திறன் நன்கு பயன்படுத்தப்படும். முன்பள்ளிக் கல்வி பெற்றவர்கள் ஆரம்பக் கல்வியில் துடிப்புடன் ஈடுபடுவதை நாம் அறிவோம்.

இலங்கையில் 1999 தொடக்கம் 2003 காலப்பகுதியில் 55 ஆயிரம் பேர் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இதில் 8 ஆயிரத்து 767 பேர் வடக்கு- கிழக்கில் பணிபுரிகின்றனர். வடக்கு-கிழக்கில் பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் கல்வியில் பின்னடைவையும் இது ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பக் கல்வியில் எழுத்து அறிவு சம்மந்தமாக வளர்ச்சி காணப்பட்டபோதும், எண்ணறிவில் வளர்ச்சி குறைவாகவுள்ளது. 2000 ஆம் ஆண்டில் 32 வீதமாக இருந்த எழுத்தறிவு வீதம் 2003 ஆம் ஆண்டில் 37.42 வீதமாக வளர்ந்து 5.42 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் 20 வீதமாக இருந்த எண்ணறிவு 2003 ஆம் ஆண்டு 21 வீதமாக ஒரு வீத வளர்ச்சியே கண்டுள்ளது. இதனால் எண்ணறிவில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண் டும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது யாவரும் அறிந்ததே.

வடக்கு-கிழக்கில் இன்று போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிப்புகள் ஏற்பட்டு ஆசிரியர், மாணவர் இடப்பெயர்வு, ஆசிரியர்களின் இளைப்பாற்றல்கள், பதிலீடு செய்யப்படாமை, வருவாய்க்காக ஆசிரியர்கள் பலர் வெளிநாடு செல்லல், மாகாணத்தை விட்டு மாற்றப்பட்டுச் செல்லல் போன்ற பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். இத்தருணத்தில் ஆரம்பக்கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. படிப்பைத் தொடர்ந்து படிக்க முடியாத நிலை, வகுப்பாசிரியர் இன்றியும் அவதிப்படுகின்றனர். பல பாடசாலைகளில் வசதிக் கட்டணத்துடன் படிப்பிக்கும் ஆசிரியர்களின் போதனையானது, நிரந்தர ஆசிரியர்களின் போதனைக்கு ஈடாகாது. பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே.

இன்று தொலைக்காட்சி பலவிதத்தில் இவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. நல்ல நிகழ்சிகள் மாத்திரம் பார்க்கக் கூடியவையாகவும், ஏனைய ஆபாசங்கள், சண்டைகள், காதல் லீலைகள் என்பவற்றை பிரபல்யப்படுத்துவனவாகவும் உள்ளன. பிள்ளைகளைச்சுயமாகச்சிந்தித்து செயலாற்ற வும் இது தடையாக அமைகிறது. இன்று வீட்டுக்குவீடு




தொலைக்காட்சி இருக்கின்றது.

எனவே, வீட்டிலுள்ள பெற்றோர் பிள்ளைகளைக் கட்டுப்பாடாக வைத்து நல்ல நிகழ்ச்சிகளை மாத்திரம் பார்க்க வழிவகுக்க வேணடும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது எனவே, ஐந்தில் வளைந்து கொடுக்கச் செய்ய வேண்டும். அவர்களை சுயமாகச் சிந்தித்து செயலாற்றும் திறனை ஊக்குவிக்க வேண்டும். தற்போது 12 வீடுகளுக்கு ஒருவர் என்ற அளவில் 14 வயதுக் குட்பட்டோர் வீட்டு வேலையாள்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் துஷ்பிரயோகம், சித்திரவதை என்பனவற்றிற்குட்பட்டுள்ளனர். சுமார் 10 சதவீதமான சிறுவர்களும் 20 சதவீதமான சிறுமியர்களும் மிகச்சிறு வயதிலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளனர். பாடசாலைக்குச் செல்லக்கூடிய வயதுடைய 14 சதவீதமான பிள்ளைகள் தற்போது முறையாகக் கல்வியைப் பெறுவதில்லை. எனவே 14 வயதிற்கு கீழ்ப் பட்ட சிறுவர்கள் கட்டாயமாக பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி. பாடசாலைச் சமூகத்தைப்பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகும். பாடசாலை மாணவர்களது நற்பழக்கங்கள், சிக்கனம், தூய்மை, பாதுகாப்பு, பக்குவம், பணிவு, அன்பு, மரியாதை என்ற பண்புகளைப் புகட்டி அவன் ஆரம்பத்திலிருந்தே மேன்மக்கள்பேற்றைப் பெற வழிவகுக்கிறது. எனவே பாடசாலையானது சீரிய சமூதாயத்தையும் சிறந்த குடிமக்களையும் உருவாக்கி வருகிறது எனலாம். அறியாமை என்ற இருளைப்போக்கி அறிவு என்ற பொக்கிஷத்தைக் கலந்து ஞானவிளக்கை ஏற்றி சமூகம் போற்றும் அறிஞர்களை உருவாக்குகின்றது.

இவ்வாறான கல்வியில் எமது தன் முனைப்பு எண்ணம், சுயநல எண்ணம் என்பன அழிந்து. அன்பு, தன்னம்பிக்கை, மன உறுதி, ஆத்மீக பலம் என்பன வளர்கிறது. ஆரம்பச் கல்வியை சரியான முறையில் செயற்படுத்துவோமானால் எமது ஆத்மீக சக்திக்கு இது வித்திடுகிறது. ✱

## தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 330ம/677 | திரு. சூசைப்பிள்ளை யே[illegible]தாசன் |
| 331ம/678 | திரு. பெஞ்சமின்பிள்ளை மரியாம்பிள்ளை |
| 332ம/679 | திரு. தோமஸ் பீற்றர்லியோன் |
| 333ம/680 | திரு. பிரான்சிஸ்பிள்ளை பிலிப்விஜயகுமாரன் |
| 334ம/681 | திரு. சீமாம்பிள்ளை இம்மானுவேல் |
| 335ம/682 | திரு. அந்தோனி அருளப்பு |
| 336ம/683 | திரு. அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை கோமஸ் |
| 337ம/686 | திரு. வயித்தி சூசைதாசன் |
| 338ம/689 | திரு. சந்தியோகு யேசுதாசன் |
| 339ம/690 | திரு. அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை |
| 340ம/691 | திரு. நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| 341ம/692 | திரு. பிரான்சிஸ்பிள்ளை சீலன் |
| 342ம/693 | திரு. அந்தோனி சந்தியோகு |
| 343ம/694 | திரு. சந்தான் யேசுதாசன் |
| 344ம/696 | திரு. அந்தோனி அல்பிறட் |
| 345ம/698 | திரு. பொன்னுத்துரை சண்முகலிங்கம் |
| 346ம/699 | திரு. வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் |
| 347ம/700 | திரு. நாகை[illegible] ஆறுமுகசாமி |
| 348ம/705 | திரு. சண்முகநாதன் தேவராசா |
| 349ம/714 | திரு. அந்தோனிப்பிள்ளை பொமிக்கா |
| 350ம/717 | திரு. பேதுறு எமிலியானுஸ்பிள்ளை |
| 351ம/718 | திரு. குமாரசாமி செல்வச்சீராளன் |
| 352ம/720 | திரு. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் |
| 353ம/721 | திரு. பொன்னம்பலம் தர்மலிங்கம் |
| 354ம/725 | திரு. சண்முகநாதன் ஜெகநாதன் |
| 355ம/728 | திரு. கணபதிப்பிள்ளை தர்மராசா |
| 356ம/729 | திரு. ஆறுமுகம் கனகலிங்கம் |
| 357ம/730 | திரு. காத்தி துரைச்சாமி |
| 358ம/731 | திரு. கந்தசாமி ஜெகநாதன் |
| 359ம/732 | திரு. இராமலிங்கம் சுப்பையா |
| 360ம/733 | திரு. சரவணமுத்து குணரத்தினம் |
| 361ம/741 | திரு. சுப்பிரமணியம் மகாலிங்கம் |
| 362ம/744 | திரு. கிருஸ்ணசாமி கருணாகரன் |
| 363ம/747 | திரு. நவரத்தினம் சத்தியநாதன் |
| 364ம/749 | திரு. கபிரியல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| 365ம/751 | திரு. பொன்னுச்சாமி புவனேஸ்வரன் |
| 366ம/757 | திரு. நடராசா சிவபாதசுந்தரம் |
| 367ம/759 | திரு. செல்லத்தம்பி விஜயகுமார் |
| 368ம/761 | திரு. கணபதிப்பிள்ளை மோகனராசா |
| 369ம/762 | திரு. செல்லையா கர்ணன் |
| 370ம/763 | திரு. இராசையா செல்வநாயகம் |
| 371ம/764 | திரு. முருகன் கிருஷ்ணபிள்ளை |
| 372ம/765 | திரு. கதிரேசு யோகநாதன் |
| 373ம/766 | திரு. தீயோகு சார்வே |
| 374ம/767 | திரு. செல்வன் சர்வானந்தம் |
| 375ம/771 | திரு. சங்கரப்பிள்ளை கந்தசாமி |
| 376ம/772 | திரு. இராமு ஜெயபாலன் |
| 377ம/773 | திரு. முருகுப்பிள்ளை நவரத்தினம் |
| 378ம/775 | திருமதி. கமலாசினி கலாசுந்தரம் |

(மிகுதி வரும்)

# மோட்டார் சைக்கிளோட்டி காயம்!

தென்மராட்சி,நவ.8

நாய்கள் துரத்திய வேளையில் சடுதியாக மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்ட வேளையில் தூக்கி வீசப்பட்டு மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மட்டுவிலைச் சேர்ந்த என்.நகுலேஸ்வரன் (வயது 30) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(3-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்று (07.11.2005) திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்டம்பெற்ற யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன நண்பர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா* (HNDA)

அபர்ணா செல்வத்துரை
யேசுதாசன் நிறோசானந்
கந்தையா அமுதன்
குகானந்தன் மாசிலன்
மருதலிங்கம் பிரசாந்தன்
நடேசபிள்ளை சிறிறஞ்சன்
பிரீதினி குமாரசாமி
பிரசாந்தினி பெருமாள்
ராமச்சந்திரன் சாந்தநாயகி
செல்லத்துரை பிரசாத்
சண்முகம் பிறேமகுமார்
சாந்தினிதேவி மகாலிங்கம்
சுலோசினி பரராஜசிங்கம்
சுந்தரமூர்த்தி பிறேம்குமார்
தனபாலன் தனேந்திரன்
தில்லைதாண்டவர் மங்களேஸ்வரன்

*உயர்தேசிய வர்த்தக டிப்ளோமா* (HNDC)

சுபாசினி சிவகுருநாதன்
தவமலர் கணபதிப்பிள்ளை

*தேசிய வியாபாரமும் நிதியும் டிப்ளோமா* (NDBF)

பொன்னம்பலம் உமாசங்கர்
சரவணபவானந்தன் கேமலதா

*தேசிய வியாபாரக் கற்கைநெறி டிப்ளோமா* (NDBS)

அப்புத்துரை செந்தூரன்
யோவேஸ்வரா சாருமதி
சுகந்தினி தியாகராசா
வானதி ராசரட்ணம்

*தேசிய ஆங்கில டிப்ளோமா* (NDE)

ஏரம்பமூர்த்தி பகீதரன்
யசோதை துரைராஜசிங்கம்
கந்தையா சிறிகருணாகரன்
லக்ஸ்மனன் குமணன்
நமர்தா பரமேஸ்வரன்
ரதிவதனி தியாகராஜா
சுபாஜினி பாலசுப்பிரமணியம்



பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்.

(42045) (21.32.11.34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இவ்வருடம் வெளியாகிய 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலையில் சித்தியடைந்த

**செல்வி கீர்த்தனா செல்வரத்தினம்**

அவர்களைப் பாராட்டுவதுடன்

2004ஆம் ஆண்டு வெளியாகிய க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் **9A, B** பெற்ற

**செல்வி கிருஷ்ணப்பிரியா கோபாலகிருஷ்ணன்**

*அவர்களது பெறுபெறு மீளாய்வின் பின் 10A ஆகப் பெறப்பட்டதையிட்டு அவரையும் வாழ்த்துகின்றோம்.*

பழைய மாணவர் சங்கம்,
பழைய மாணவர் சங்கம் (சுவிஸ்கிளை),
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்.

(42383)(21.11.34)

### பொதுமண்டபங்கள் அமைக்கும் பணி ஆரம்பம்

நல்லூர்,நவ.8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரியாலை கிழக்கு, வண்.வட மேற்கு கிராம அலுவலர் பகுதிகளில் ஒவ்வொரு பொது மண்டபங்கள் அமைக்கப்படும்.

வண்.வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட நிறுவனமும் - அரியாலைகிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நிக்கொட், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியனவும் - அமைக்கவுள்ளன.

இந்த மண்டபங்களை அமைக்கும் வேலைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

(3-111)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26.06.1910



மறைவு 08.11.1995

**அமரர் கதிரவேலு குழந்தைவேலு**

(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய், விவேகானந்த வித்தியாசாலை)

ஆண்டுகள் பத்துக் கடந்தாலும்
ஆண்டவன் நினைவில் இருந்தாலும்
நீங்கா நினைவுகள் எம் மனதில்
நித்தம் நித்தம் ஏங்கும் உள்ளம்
பார்க்கும் இடமும் உங்கள் உருவம்
கேட்கும் ஒலியும் உங்கள் ஒலியே.

*திருமதி அ.கலா* (மகள்)
*மகேசன் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(42045) (39.11.34)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




சட்டநாதர் வீதி, நல்லூரைச்சேர்ந்த **ராதாகிருஸ்ணன் -தவறதி** தம்பதியரின் செல்வப்புதல்வி **டிலக்ஷனா** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (08.11.20 05) செவ்வாய்க் கிழமை தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

லக்ஷனா குட்டியை


அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமன்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார்கள், அத்தைமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார் நல்லைக்கந்தன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றார்கள்.



தகவல்:
ராதாகிருஸ்ணன்,
தவறதி.

(42083)(51-)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 08 - 06 - 1933

மறைவு 11 - 10 - 2005

கடந்த 11.10.2005 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் மருதப்பு தங்கம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (08.11.2005) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் 10.11.2005 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*70, கல்லூரி வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

(42388) (32-11-34)

**குடும்பத்தினர்.**


SIT School Of Information Technology
Computer Training Center
Alaveddy West, Alaveddy

இனியும் தாமதம வேண்டாம்

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hard ware Technology
- Diploma in Visual Basic Programming
- Diploma in Web - Design
- Diploma in Video Mixing
- Children Programming

புதிய பிரிவுககள் ஆரம்பம் 15/11/05 22/11/05

சிறுவர்களுக்கான விசேட கணனி வகுப்புகள்

A/L மாணவர்களுக்கான GIT

ஆரம்பம் 19/11/05

அலுவலக நேரத்தில மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.
(அருணோதயாக் கல்லூரிக்கு அருகாமையில்)
அளவெட்டி மேறகு, அளவெட்டி.


## ஒன்பதாம் ஆண்டு நினைவினில்



வீரமலர்வு 17.06.1969

வீரஉதிர்வு 08.11.1996

**முருகேசு நந்தகுமார்**

மேஜர் தென்னவன்/ நந்தன்

*(கல்லுண்டாய் வெளிப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் சுற்றி வளைக்க முற்பட்டபோது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)*

பஞ்சபூதங்களும் உன்னை மறக்கவில்லை- எம்
ஐம்பொறிகளும் ஆடவில்லை, அசையவில்லை
நினைப்பினில் எங்கள் மேஜர் தென்னவன் இன்னும் மறையவில்லை
கப்டன் வெண்ணிலவனோடு நீ போனதடம் இன்னும்- மறையவில்லை
எங்கள் விழிகள் சொரியும் அருவி இன்னும் வற்றவில்லை.

(42373) (39-32-11-34)

நண்பர்கள்.

# புலமைப்பரிசில் பெறுபேறுகள்: ஆழமான ஆய்வுகள் அவசியம்!

ஐந்தாம் தரத்தில் நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையும் அதில் மாணவர் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளும் இப்போது அனைவராலும் பேசப்படும் விடயமாகிவிட்டது. இந்தப் பரீட்சையில் யாழ்.வலயத்தைச் சேர்ந்த 700இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ்வாண்டு மேற்படி பரீட்சைக்குத் தோற்றவில்லை என்பது புதிதாகக் கசிந்த ஒரு தகவலாகும். இத்தகவல் உண்மையானதுதானா என்பதும் அவ்வாறாயின் அதற்கான காரணிகள் எவை என்பதும் கண்டறியப்படவேண்டும்.

வருடந்தோறும் ஆனி மாதம் முதலாம் திகதியன்று உள்ளவாறு வகுப்பு ரீதியாகவும் பால் ரீதியாகவும் சமய ரீதியாகவும் போதனாமொழி ரீதியாகவும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் கல்வித் திணைக்களத்தினால் பெறப்படுவது வழமையான ஒரு நிகழ்வாகும். இவ்வருடம் இவ்வாறு பெறப்பட்ட யாழ் வலயத்தைச் சேர்ந்த 5ஆம் வகுப்பு மாணவர்களின் தொகை 4ஆயிரத்து 19ஆகும். இவர்களில் 3ஆயிரத்து 286பேர் மட்டுமே மேற்படி பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதியும் ஆனிமாதம் கணக்கெடுக்கப்படும் திகதியும் மிகவும் அண்மித்து இருப்பதால் இத்தொகைகள் பெரும்பாலும் வேறுபாடடைய வாய்ப்புகள் மிகவும் குறைவு. ஆனால் இவ்வித்தியாசம் 713 ஆகவுள்ளது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த, தோற்றிய, சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை அட்டவணை 1 காட்டுகிறது.

| | 01.06.2005 அன்று பெறப்பட்ட மாணவர் தொகை | புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போதுள்ள மாணவர் தொகை | புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர் தொகை | புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் தொகை | சித்திபெற்ற மாணவர் தொகை | உதவிப் பணம் பெறத் தகுதியானோர் தொகை | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணக் கோட்டம் | 1338 | 1319 | 1167 | 1112 | 160 | 80 | 14.39 |
| நல்லூர்க் கோட்டம் | 1376 | 1352 | 1226 | 1205 | 223 | 134 | 18.51 |
| கோப்பாய் கோட்டம் | 1305 | 1268 | 1061 | 969 | 53 | 41 | 5.47 |
| யாழ்ப்பாணம் வலயம் | 4019 | 3939 | 3454 | 3286 | 436 | 255 | 13.27 |
| உடுவில் கோட்டம் | | | | 826 | 65 | 24 | 7.87 |
| சங்கானைப் கோட்டம் | | | | 725 | 55 | 31 | 7.59 |
| சண்டிலிப்பாய் கோட்டம் | | | | 906 | 60 | 44 | 6.62 |
| தெல்லிப்பழைக் கோட்டம் | | | | 474 | 25 | 18 | 5.27 |
| வலிகாமம் வலயம் | | | | 2931 | ·205 | 117 | 6.99 |

அட்டவணை - 1

யாழ். வலயத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த 3ஆயிரத்து 454 மாணவர்களில் 3 ஆயிரத்து 286பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். பரீட்சைக்கு விண்ணப்பித்தும் பரீட்சைக்குத் தோற்றாத இந்த 168 மாணவர்களும் என்ன காரணங்களினால் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்பதும் இவர்கள் பரீட்சைக்குத் தோற்றாமல் இருப்பதற்காக ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டனவா என்பதும் கண்டறியப்படவேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது 5ஆம் வகுப்பில் இருந்தாகக் காட்டப்பட்ட 3ஆயிரத்து 939 மாணவர்களில் 3ஆயிரத்து 454பேர் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் 01.06.2005 அன்று பெறப்பட்ட தகவல்களின்படி 5ஆம் வகுப்பிலிருந்த மாணவர் தொகை 4ஆயிரத்து 19 ஆகும். எனவே 565மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. இத்தொகையில் குறிப்பிட்ட மாணவர்கள் கூடிய வயது காரணமாகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் 565 பேரும் அதிக வயதுடையவர்களாக இருந்திருக்கமுடியாது. வலிகாம வலயத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் போதுமானவையாக இல்லாதபடியால் பரீட்சைக்குத் தோற்றவிடாது தடுக்கப்பட்டவர்களின் விவரங்களைப் பெறமுடியாதுள்ளது. அதிபர்கள் சிலரின் மெத்தனப் போக்கால் பல மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றாதவாறும் தடுக்கப்படுவது குறித்து பல மட்டங்களிலுமிருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளதால் இவ்விடயம் பாடசாலை ரீதியாக ஆராயப்பட்டு எதிர்காலத்திலாவது மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

அட்டவணை - 2 மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் பரம்பலைக் காட்டுகிறது. அட்டவணை 3 மேற்படி பரம்பல்களின் சதவீதத்தைக் காட்டுகிறது.

யாழ்ப்பாண வலயத்திலுள்ள 90பாடசாலைகளிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 3ஆயிரத்து 286 மாணவர்களில் 13.27 வீதத்தினரான 436 பேர் யாழ். மாவட்ட வெட்டுப்புள்ளியாகிய 124புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். ஏனைய வலயங்களான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய நான்கு வலயங்களிலுமிருந்து வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் தொகை 414ஆகும். இந்தப் புள்ளி விவரங்களை மட்டும் வைத்துக்கொண்டு யாழ். வலயத்தின் கல்வித் தரம் முன்னணியில் நிற்பதாகப் பெருமை கொள்ள முடியுமா என்பதைப் பற்றிக் கல்வியியலாளர்களே தீர்மானிக்கவேண்டும்.

யாழ். வலயத்திலுள்ள பிரபல ஆரம்பப் பாடசாலைகளான புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகிய 3 பாடசாலைகளிலும் முறையே 84,96,48 எனும் எண்ணிக்கையில் 228 பேர் வெட்டுப் புள்ளியிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இத்தொகை யாழ். வலயத்தில் வெட்டுப்புள்ளிகளிலும் கூடிய புள்ளிகள் பெற்றோர் தொகையின் 52 சதவீதமாகும். இப்பாடசாலைகளுடன் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் 32 மாணவர்களையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் 21 மாணவர்களையும் சேர்த்தால் இத்தொகை 281ஆக அதாவது 64 சதவீதமாகக் காணப்படுகிறது.

மேலும் யாழ். மத்திய கல்லூரியின் 16 மாணவர்களையும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 14 மாணவர்களையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 11 மாணவர்களையும் ஆனைப்பந்தி மெ.மி.த.க பாடசாலையின் 10 மாணவர்களையும் நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாசாலையின் 10 மாணவர்களையும் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் 10 மாணவர்களையும் இத்துடன் சேர்த்துக்கொண்டால் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் தொகை 352 ஆக, அதாவது 80.73 வீதமாக அதிகரிக்கின்றது.



புலமைப்பரிசில் பரீட்சையில் எந்தவொரு மாணவனும் தெரிவுசெய்யப்படாத யாழ். வலயத்திலுள்ள 41 பாடசாலைகளையும் எடுத்துக்கொண்டால் யாழ்.வலயப் பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 3 ஆயிரத்து 286 மாணவர்களில் 720 பேர் மட்டுமே இந்த 41 பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அதாவது பரீட்சைக்கு மொத்தமாகத் தோற்றியவர்களில் 22 சதவீதமானோர் மட்டுமே இந்த 41 பாடசாலைகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றித் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆவர். அதேவேளை, இப்பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 49 பாடசாலைகளிலுமிருந்து தோற்றிய 2ஆயிரத்து 566 மாணவர்களில் 2ஆயிரத்து 130 பேர் இப்பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல்பெறவில்லை என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

## ஒரு கண்ணோட்டம்

அடுத்ததாக வலிகாமம் வலயப் பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் வலிகாம வலயத்திலுள்ள 118 படசாலைகளிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 2ஆயிரத்து 931 மாணவர்களில் 6.99 வீதத்தினரான 205 பேர் யாழ்.மாவட்ட வெட்டுப் புள்ளியாகிய 124 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்கள் இந்த வலயத்தில் உள்ள 118 பாடசாலைகளில் 62 பாடசாலைகளைச் சேர்ந்தவர்களாவர். இந்த வலயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் மூன்று பாடசாலைகளான உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் முறையே 22, 22, 10 பேர் எனும் எண்ணிக்கையில் 54 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இத்தொகை வலிகாம வலயத்தில் வெட்டுப்புள்ளிகளிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர் தொகையின் 26.4 வீதமாகும்.

| | 00-20 | 21-40 | 41-60 | 61-80 | 81-100 | 101-120 | 121-123 | 124-140 | 141-160 | 161-180 | 181-200 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணக் கோட்டம் | 34 | 115 | 217 | 194 | 200 | 169 | 23 | 99 | 53 | 08 | 00 | 1112 |
| நல்லூர்க் கோட்டம் | 23 | 110 | 192 | 176 | 210 | 240 | 31 | 157 | 60 | 06 | 00 | 1205 |
| கோப்பாய் கோட்டம் | 92 | 208 | 217 | 159 | 117 | 119 | 06 | 48 | 05 | 00 | 00 | 969 |
| யாழ்ப்பாணம் வலயம் | 149 | 431 | 626 | 529 | 527 | 528 | 60 | 304 | 118 | 14 | 00 | 3286 |
| உடுவில் கோட்டம் | 41 | 128 | 184 | 151 | 132 | 108 | 17 | 52 | 13 | 00 | 00 | 826 |
| சங்கானைக் கோட்டம் | 53 | 158 | 171 | 121 | 86 | 73 | 08 | 40 | 14 | 01 | 00 | 725 |
| சண்டிலிப்பாய் கோட்டம் | 43 | 158 | 216 | 178 | 145 | 101 | 05 | 44 | 16 | 00 | 00 | 906 |
| தெல்லிப்பழைக் கோட்டம் | 21 | 85 | 122 | 80 | 69 | 58 | 14 | 18 | 07 | 00 | 00 | 474 |
| வலிகாமம் வலயம் | 158 | 529 | 693 | 530 | 432 | 340 | 44 | 154 | 50 | 01 | 00 | 2931 |

அட்டவணை - 2

புலமைப்பரிசில் பரீட்சையில் எந்தவொரு மாணவனும் தெரிவுசெய்யப்படாத வலிகாம வலயத்திலுள்ள 56 பாடசாலைகளையும் எடுத்துக்கொண்டால் வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 2 ஆயிரத்து 931 மாணவர்களில் 858 பேர் மட்டுமே இந்த 56 பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அதாவது பரீட்சைக்கு மொத்தமாகத் தோற்றியவர்களில் 29 சதவீதமானோர் மட்டுமே இந்த 56 பாடசாலைகளிருந்து பரீட்சைக்குத் தோற்றித் தெரிவுசெய்யப்படாதவர்கள் ஆவர். அதே வேளை, இப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற 62 பாடசாலைகளிலும் இருந்து தோற்றிய ஆயிரத்து 983 மாணவர்களில் ஆயிரத்து 778 பேர் இப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறவில்லை என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய இரு வலயங்களையும் எடுத்துக்கொண்டால் பரீட்சைக்குத் தோற்றிய 6ஆயிரத்து 217 பேரில் 10.31 வீதத்தினராகிய 641 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

மறுபுறமாகப் பார்க்கும்போது மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பெறுபேறுகளை ஆய்வு செய்வதே சிறந்ததாக அமையும் இவ்வகையில் பாடமொன்றுக்கு சராசரி யாக 40 புள்ளிகளுக்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களை ஒரு புறத்திலும் 40 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்களை மறுபுறத்திலுமாக வகைப்படுத்தும்போது கிடைத்த முடிவுகள் பின்வருமாறு அமைந்தன. அதாவது மொத்தமாக 80புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெற்றவர்கள் யாழ். வலயத்தில் 47.17 வீதமாகவும் வலிகாம வலயத்தில் 34.91 வீதமாகவும் உள்ளனர்.

எனவே, மொத்தமாக 80 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்ற மாணவர்களின் தொகை யாழ்.வலயத்தில் 52.83 வீதம் ஆகவும் வலிகாமம் வலயத்தில் அதைவிட அதிகமாக 65.09 வீதம் ஆகவும் காணப்படுகிறது. என்வே மாணவர்களின் கல்வித் தரமானது சிறப்பானதாக இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

இந்த வீதமானது யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 12.6 வீதமாகவும் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 13 வீதமாகவும் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் 14.2வீதமாகவும் காணப்படுகிறது. வலிகாமம் வலயத்தில் முதல் மூன்று இடங்களிலுமுள்ள பாடசாலைகளில் இந்த வீதமானது 30இலும் அதிகமாகவே உள்ளது. எனவே பிரபல ஆரம்ப பாடசாலைகளில் அனுமதிக்காக பெற்றோர்களில் படையெடுப்பு நியாயப் படுத்தப்படவேண்டியதாகவே யுள்ளது. எந்தவிதமாகப் பார்த்தாலும் அதிக வீதமானோர் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவாறு அமைந்துள்ளதைப் மறுக்கமுடியாதுள்ளது.

மாணவர்களின் ஆரம்பக் கல்வியானது உறுதியாக அமைந்தால் மட்டுமே அவர்கள் உயர் கல்வியில் பிரகாசிக்கமுடியும். மேற்படி புலமைப்பரிசில் பரீட்சையில் பெரும்பலான மாணவர்கள் பெற்ற புள்ளிகள் திருப்திகரமாக அமையாதுள்ளதை மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணைகளிலிருந்து அறியமுடியும். யாழ். வலயத்தில் 53 வீதத்தினரும் வலிகாமம் வலயத்தில் 65 வீதத்தினரும் சராசரியாக 40 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றுள்ளனர். இந்த நிலை மாற்றப்பட்டால் மட்டுமே மாணவர்களின் இடைவிலகல் குறைவடையும். உயர் கல்வி மேம்பாடடையும்.

எனவே, ஆரம்ப வகுப்புப் பாடமொன்றில் ஒவ்வொரு மாணவனும் சராசரியாக 40 புள்ளிகளைப் பெறும் வகையிலாவது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்குக் கல்வி அதிகாரிகளும், அதிபர்களும், ஆசிரியர்களும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

**விவரன்**

| | 00-20 | 21-40 | 41-60 | 61-80 | 81-100 | 101-120 | 121-123 | 124-140 | 141-160 | 161-180 | 181-200 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணக் கோட்டம் | 3.06 | 10.3 | 19.5 | 17.4 | 18 | 15.2 | 2.07 | 8.9 | 4.77 | 0.72 | 00 | 100 |
| நல்லூர்க் கோட்டம் | 1.91 | 9.13 | 15.9 | 14.6 | 17.4 | 19.9 | 2.57 | 13 | 4.98 | 0.5 | 00 | 100 |
| கோப்பாய் கோட்டம் | 9.49 | 21.3 | 22.4 | 16.4 | 12.1 | 12.3 | 0.62 | 4.95 | 0.52 | 0 | 00 | 100 |
| யாழ்ப்பாணம் வலயம் | 4.53 | 13.1 | 19.1 | 16.1 | 16 | 16.1 | 1.83 | 9.25 | 3.59 | 0.43 | 00 | 100 |
| உடுவில் கோட்டம் | 4.96 | 15.5 | 22.3 | 18.3 | 16 | 13.1 | 2.06 | 6.3 | 1.57 | 0 | 00 | 100 |
| சங்கானைக் கோட்டம் | 7.31 | 21.8 | 23.6 | 16.7 | 11.9 | 10.1 | 1.1 | 5.52 | 1.93 | 0.14 | 00 | 100 |
| சண்டிலிப்பாய் கோட்டம் | 4.75 | 17.4 | 23.8 | 19.6 | 16 | 11.1 | 0.55 | 4.86 | 1.77 | 0 | 00 | 100 |
| தெல்லிப்பழைக் கோட்டம் | 4.43 | 17.9 | 25.7 | 16.9 | 14.6 | 12.2 | 2.95 | 3.8 | 1.48 | 0 | 00 | 100 |
| வலிகாமம் வலயம் | 5.39 | 18 | 23.6 | 18.1 | 14.7 | 11.6 | 1.5 | 5.25 | 1.71 | 0.03 | 00 | 100 |

அட்டவணை - 3

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு அம்மன் கோயில் அருகில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0094112599399. (42509)

85, திருநகர், கிளிநொச்சி புகையிரத வீதியில் உள்ள 8 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 764, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0779217494, 0773223133. (45551)

### வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் உள்ள 5 பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A. நற்குணசேகரம் 021 4591365, A. மதனசேகரம் 0112505738 (42379)

### வீடு வாடகைக்கு

சுண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கு அருகில் பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0777030015, 0777488185. (42379)

### தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த முருகேசு நளாயினி என்பவரது காப்புறுதிப் புத்தகம் அவரது வீட்டிற்கும் இராஜபாதை வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந.சத்தியமூர்த்தி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42392)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 09.11.05 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சீத் 517, ஸ்ரான்லி றோட், சுபகணநாதன் பண்ணை, நெல்லியடி, மாலுச்சந்தி. P.ரவி சாவகச்சேரி. T.P.: 222 2867, 2223529. (42399)

### சேவை

55000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் விண்ணப்பம் Intenet மூலம் Process பண்ணி அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க றிசீட் தரப்படும். ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம். 16 வயதிற்கு மேற்பட்டவர்களும் தனியாக அனுப்பலாம். Latent விண்ணப்பத்தை இலவசமாகப்பெற Penquine Book shop B2/F23 Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 , 2438367. (சி-45983)

55000 அமெரிக்க விசா லொத்தர் ( Green card) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்கு தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005 உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு Internet மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். Penquin Book shop B2/F23 Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 .(சி-46105)

### காணாமற் போனோர் விவரம் சேகரிப்பு

1996-1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களின் விவரங்களை சேகரிக்கும் செயற்பாட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் முதற்கட்டமாக பதிவுகள் எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே காணாமற் போனோர் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் அனைவரையும் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து விவரங்களைச் சேகரிக்க உதவுமாறு காணமற்போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 அன்று நடைபெற்ற 24ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (Master of Education) பட்டம் பெற்ற சாவகச்சேரியைச் சேர்ந்த

**திரு.வே.சுந்தரலிங்கம்**

அவர்களை மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய். (42553) (24-11-45) - நடராஜா குடும்பத்தினர்.

**ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்**



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார்.

வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

❖ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளை சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**

அறை எண் 5, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.

தினம் தினம் அமெரிக்கா மற்றும் லண்டனில் இருந்து தருவிக்கப்படும் ஒலிப்பயிற்சிகளுடன் ஆங்கில பாடநெறி

**மூன்றே மாதங்களில் ஆங்கிலம்**

**SAAMSTECH இன் FAST ENGLISH**

ஒவ்வொரு பிரிவும் வாரத்தில் மூன்று நாட்கள், 3 மாதங்கள் அல்லது சனி, ஞாயிறு, 4 மாதங்கள்

1. மாணவர்களுக்கான பிரிவு 1 - 7ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
2. மாணவர்களுக்கான பிரிவு 2 -11ம் வகுப்பு முதல் 13 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
3. வீட்டுப்பெண்களுக்கான பிரிவுகள் - பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
4. இளைஞர் மற்றும் யுவதிகளுக்கானது - பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
5. பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்களுக்கானது - பி 1. காலை 6.30 - 8.00 பி 2. மாலை 5.00 - 6.30
6. அலுவலர்களுக்கான பிரிவுகள் - பிரிவு 1. காலை 6.30 - 8.00 பிரிவு 2. மாலை 6.30 - 7.30.

ஒவ்வொரு வகுப்பிலும் விரிவுரைகள், உரையாடல்கள், மற்றும் செய்திகள், அரங்கம் அடங்கலான ஒலிப்பயிற்சிகள்

இன்று பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD இலவசம்
மேலதிக விபரங்களுக்கு 07.11.2005 (நேற்று) உதயனில்.......

காலம் : 3 மாதங்கள் கட்டணம் : 3000/- மட்டும் ஆரம்பம் : 08.11.2005

**SAAMSTECH** 841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505


## தெருவாரம் வீதியைப் புனரமைக்க நிதி ஒதுக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி,நவ.8

மீசாலை வடக்கு, தட்டான் குலப்பிள்ளையார் கோயிலூடாக மந்துவிலுக்குச் செல்லும் தெருவாரம் வீதியைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மந்துவில் பகுதி மக்கள் மகஜர் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜை கேட்டுள்ளனர்.

மீசாலை, புத்தூர் சந்தியிலிருந்து மந்துவிலுக்குச் செல்லும் இவ்வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

இவ்வீதி அண்மைக் காலமாக கனரக பார ஊர்திகள் அதிக அளவில் பயன்படுத்துவதால் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. மழை பெய்து வருவதால் இவ்வீதியின் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வீதி சேதமடைந்துள்ளதால் இப் பகுதி மக்கள் வேம்பிராய் சந்தியூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது - இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-117)


**அறவழிப் போராட்டக்குழு**
**பகுதிநேர ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வெற்றிடம்**

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட 20 பாடசாலைகளில் தரம் 3 இற்கான தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்களை மெல்லக் கற்கும் மாணவர்களக்குப் போதிப்பதற்கு உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தங்களின் விண்ணப்பங்களை 15.11.2005 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்

செயலாளர்
அறவழிப்போராட்டக்குழு,
29 கைதடி - நுணாவில், சாவகச்சேரி.

NVDAG (42557) (21-11-45)

**20 ஆம் ஆண்டு நினைவலைகள்**



**திருமதி தம்பிநாயகம் லூர்த்தம்மா**
(நாரந்தனை மேற்கு)

மலர்வு 01.08.1922 | உதிர்வு 08.11.1985

ஆண்டுகள் இருபது
கடந்தாலும் ஆறாது
அம்மா எம் துயரம்.

உங்களை நினைந்துஉருகும்...
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

J.கிறிஸ்ரி
29/5.புது வீதி. கொய்யாத்தோட்டம்.
(42397)

**ASIAN** மற்றும் CSC இந்திய உயர்கல்வி நிறுவனம் இணைந்து இலங்கையில் முதன் முறையாக G.C.E. O/L மற்றும் A/L பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் Computer கல்விக்கான ஸ்கொலர்ஷிப் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

**MERIT 2005**
Bring your Result Sheet



Student can now use their best result sheet

கீழ்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ் ஒன்றின் பிரதியுடன் எமது பயிற்சிமையங்களை நாடுங்கள்.
- பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டது
- பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்டது.
- இணையம் மூலமாக பெறப்பட்டது.

Merit Scholarship
திட்டத்தில் சேர்வதற்கு பரீட்சை ஆண்டு மற்றும் வயதெல்லை கிடையாது. சாதாரண தர அல்லது உயர்தர பெறுபேறுகள் எதுவானாலும் பயன்படுத்த முடியும்.
Eligibility : G. C. E. O/L

Registered with Tertiary and Vocational Education Ministry

O/L or A/L சான்றிதழுடன் வாருங்கள் !
ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள் !

**ASIAN COMPUTERS** 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவையில்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2 G, Stanley Road,Jaffna. | Kodikamam Road Nelliyadi, | Kandy Rd, Chavakachcheri, |
| Tel : 021 - 222 5677 | Tel : 077-3122198 | Tel : 077-3039587 |

OUR NETWORK BRANCHES : Kotahena, Wellawtta, Wattala, Mattakkliya, Negombo, Kandy, Trinco Vavuniya, Batticaloa, Chilaw, Kotagala, Valaichchenai, Akkaraipattu

# மத்திய அமெரிக்காவில் கடும் புயல்
# 21 பேர் உயிரிழந்தனர்; 200 பேர் காயம்

இந்தியானா, நவ.8

அமெரிக்காவிலுள்ள இந்தியானா மாநிலத்தில் வீசிய கடும் புயல் காரணமாக குறைந்தது 21 பேர் உயிரிழந்தனர். மேலும், 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 1000இற்கும் மேற்பட்ட வீடுகள் கடும் சேதத்துக்குள்ளாகின.

'ரொர்னாடோ' என்ற புயல் இந்தப் பகுதிகளில் மணிக்கு 254 கிலோமீற்றர் வேகத்தில் வீசியது என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

'ரொர்னாடோ' புயல் கென்ருக்கி என்ற பகுதியைக் கடந்து இந்தியானா மாநிலத்தின் தென்மேற்குப் பகுதிகளை உள்ளூர் நேரம் காலை 8 மணியளவில் தாக்கியது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

புயல் முன்னெச்சரிக்கைக்கான 'சைரன்' ஒலி புயல் தாக்குவதற்கு முன்னரே ஒலிக்கச் செய்யப்பட்டபோதும் பெரும்பாலான மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தமையால் புயல் குறித்து மக்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியானாவில் தாக்கிய புயல் காரணமாக 'ரெய்லர் பார்க்' என்ற ஒடுங்கிய பகுதியில் இருந்த நடமாடும் இல்லங்கள் பல கடுமையாக சேதமடைந்தன. இவ்வாறான வீடுகளில் இருந்த 17 பேர் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தியானாவின் 'வரிக்' நகரில் மேலும் 5 பேர் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தப் புயல் பெரும் இரைச்சலுடன் வந்தது. ஒருசில நிமிடங்கள் மட்டுமே இது நீடித்தது என்றார் அவர்.

மீட்புப்படையணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில் -

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெற்றோரைக் காணாமல் குழந்தைகளும், குழந்தைகளைக் காணாமல் பெற்றோரும் தேடிக் கொண்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க மிகவும் பரிதாபமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளில் அமெரிக்கத் தேசிய பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

நவம்பர் மாதங்களில் 'ரொர்னாடோ' புயல் வீசுவது குறைவு என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 'ரொர்னாடோ' புயல் காரணமாக அமெரிக்க மாநிலங்கள் சிலவற்றில் 10 பேர் வரை உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் ரொர்னாடோ புயல் காரணமாக 70 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் வீசிய கடும் புயல் காரணமாக அப்பகுதி பலத்த சேதத்துக்குள்ளாகியது. புயல் காரணமாக முற்றாகச் சேதமடைந்த வீடொன்றினை முதலாவது படத்திலும், சேதமடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் சிலவற்றை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு எட்டு பேர் மரணம்!

இஸ்லாமாபாத், நவ.8

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் தங்கியிருந்த வீடொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 பேர் உயிரிழந்தனர்.

குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற வீட்டில் தீவிரவாதிகள் தங்கியிருந்தனர் எனவும், வெடிகுண்டு தயாரிப்பின்போது ஏற்பட்ட தவறு காரணமாகக் குண்டுவெடித்ததில் 8 பேர் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் வடக்கிலுள்ள வாசிரிஸ்தான் என்ற பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் குறித்து தங்களுக்கு இதுவரை எதுவும் தெரியாது என்று உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். உள்ளூர் முக்கியஸ்தர் ஒருவரின் ஆதரவில் அந்த வீட்டில் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் சிலர் இரகசியமாக அங்கு தங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் 3 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## உலக அரங்கில்

# புதுடில்லி குண்டுவெடிப்பு சந்தேகநபர் ஒருவர் கைது

கொல்கத்தா, நவ.8

இந்தியாவின் புதுடெல்லியில் அண்மையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரிகளில் ஒருவரை இந்திய - பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் வைத்து இந்திய இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி டெல்லியில் நடந்த தொடர்குண்டு வெடிப்புகளின் முக்கிய சூத்திரதாரிகள் 4 பேர் பெங்களூருக்கும், உத்தரப் பிரதேசத்துக்கும் தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலீஸார் பாரிய தேடுதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் மேற்கு வங்க மாநில எல்லைப் பகுதியூடாக பங்களாதேஷிற்குள் நுழைய முயன்ற ஒருவரை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்தனர். குறித்த நப்ரை விசாரணைசெய்த பொலிஸார் அவர் லஷ்கர் -இ- தொய்பா என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் டெல்லி குண்டுவெடிப்புக்கு முன்னதாக டெல்லியில் உள்ள மசூதி அருகே தங்கியிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த நபரிடம் தொடர்ந்து விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# இந்தியா - அமெ. விமானப்படை கூட்டுப்பயிற்சி நேற்று ஆரம்பம்

கொல்கத்தா, நவ.8

இந்திய - அமெரிக்க நாடுகளின் விமானப் படைகள் இணைந்து பெரும் போர் ஒத்திகைகள் மற்றும் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகளை இந்தியாவில் நேற்று ஆரம்பித்தன.

இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்திலுள்ள இந்திய விமானப் படைத்தளத்தில் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் நேற்றுத் தொடங்கிய அதேவேளை, இதனை எதிர்த்து அங்கு இந்திய மார்க்சிஸிட் கட்சிதொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'கவாய் குண்டாச' விமானப் படைத் தளத்தில் இருநாட்டு விமானப்படையினரும் 12 நாட்கள் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இதுகுறித்து இந்திய விமானப் படை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தக் கூட்டுப்பயிற்சியில் அமெரிக்காவின் எவ். 16, எஸ்.யு. - 30, மிராஜ், மிக் - 29 பைசன் மற்றும் மிக் - 27 ரக விமானங்கள் பங்கேற்கின்றன. அந்த விமானங்களை இயக்கும் முறை அவற்றைப் பராமரிப்பது ஆகிய பயிற்சிகளை இந்திய விமானப்படையினர் பெறுவார்கள். இந்தியப் படையினரிடம் உள்ள தகவல்களை அமெரிக்கப் படையினர் பெறுவார்கள். இந்தக் கூட்டுப்பயிற்சியினால் நாட்டின் பாதுகாப்புக்கு எந்தப் பங்கமும் ஏற்படாது.

ஏற்கனவே, இதுபோன்ற கூட்டுப் பயிற்சி [illegible] தென் ஆபிரிக்கா, பிரான்ஸ், அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் மேற்கொண்டுள்ளோம். மீண்டும் அதேபோன்ற பயிற்சியை மேற்கொள்ளலாம் என்று தென் ஆபிரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஜேர்மனி ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வானில் இருந்தவாறு கண்காணிக்கும் ரேடார் வசதி பொருத்தப்பட்ட விமானம் மூலம் ஒரே நேரத்தில் 300 விமானங் களைக் கண்காணிக்க முடியும். அதிநவீன தொழில் நுட்பமான இந்த வசதியை இந்திய விமானப்படையினர் விரைவில் அறியவுள்ளனர். - என்றார் அவர். (க)

# வெள்ளிக்கோளை ஆய்வு செய்வதற்காக 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' நாளை விண்ணுக்கு

மொஸ்கோ, நவ.8

வெள்ளிக்கோளை ஆராய்வதற்காக' வீனஸ் எக்ஸ்பிரஸ்' என்ற விண்கலத்தை ரஷ்யா நாளை விண்ணில் செலுத்தவுள்ளது.

வெள்ளிக்கோள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் ஐரோப்பிய விண்வெளிக் கலத்தால் கஸகிஸ்தான் நாட்டில் உள்ள பைக்கானூர் விண்வெளி நிலையத்திலிருந்து விண்ணுக்குச் செலுத்தப்படவுள்ளது.

'' வீனஸ் எக்ஸ்பிரஸ்' வெள்ளிக்கோளை அதன் சுற்று வட்டப்பாதையில் சுற்றிவந்து அதனைப் படமெடுத்து பூமிக்கு அனுப்பும். வெள்ளிக்கோள் பூமியைப் போன்ற அளவும், அடர்த்தியும் உடையது. வெள்ளிக் கோளில் தண்ணீர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் வாயுமண்டலம் காபனீரொட்சைட்டு வாயுவாலும் அதன் மேகங்கள் கந்தக அமில வாயுவாலும் ஆனது.

சூரிய மண்டலத்திலேயே வெள்ளிக்கோள் அதிக வெப்பமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# இந்தியக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தீவிரவாதிகள் தொடர்ந்து ஊடுருவல்

## இராணுவ அதிகாரி தகவல்

காஷ்மீர், நவ.8

இந்தியாவினுள் தீவிரவாதிகளின் ஊடுருவல் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன என காஷ்மீர் பகுதிக்குப் பொறுப்பான இந்திய இராணுவஅதிகாரி வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையில்,

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் இரண்டு பகுதிகளிலும் அண்மையில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இருப்பினும், பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் மேற்கொள்ளும் ஊடுருவல் முயற்சிகள் குறையவில்லை.

இந்த ஆண்டில் இதுவரை நடைபெற்ற 39 ஊடுருவல் முயற்சிகள் அனைத்தும் இந்திய இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் 147 தீவிர வாதிகள் கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டு நடைபெற்ற 40 ஊடுருவல் முயற்சிகளில் 75 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஊடுருவல் முயற்சிகள் குறைவாகவே இருப்பினும், ஊடுருவ முயற்சிப்போரின் எண்ணிக்கை அதிகம் எனவும் அவர் தெரிவித்தார். (க)




# பாரிஸில் வன்முறைகளை நிறுத்த பொலீஸார் கடும் பிரயத்தனம்

பாரிஸ், நவ.8

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வன்முறைகள் தொடர்ந்துவருவதுடன் பொலீஸாருக்கும் வன்முறைக்குழுக்களுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதல்களில் 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பிரான்ஸ் பொலீஸார[illegible] விரட்டிச் செல்லப்பட்டவேளை மின்சாரம் தாக்கி கடந்த வாரம் இரண்டு ஆபிரிக்க இளைஞர்கள் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து ஆபிரிக்க இளைஞர் குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த 12 நாட்களாகத் தொடரும் வன்முறைகள் காரணமாக 1,500 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவை தவிர இரண்டு பாடசாலைக்கட்டடங்கள் உட்பட பல கட்டடங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்த வன்முறைகளில் ஈடுபட்ட 320 பேர் வரை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாரிஸ் நகரில் ஆரம்பித்த வன்முறைகள் ஏனைய நகரங்களுக்கும் பரவ ஆரம்பித்துள்ளமையை அடுத்து மேலதிக பொலீஸார் வரவழைப்பட்டுள்ளனர்.

வன்முறைக் குழுக்கள் ஒரு நகரில் இருந்து இன்னொரு நகருக்கு மோட்டார் சைக்கிள்களில் சென்று வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என பொலீஸார் தெரிவிக்கின்றனர். வன்முறைக் குழுக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் 2,500 பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாக 7 ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வீதிகளில் வன்முறைகளில் ஈடுபடும் குழுக்களைக் கைதுசெய்ய நவீன கமெராக்கள் மற்றும் பாரிய ஒளி செலுத்திகளையும் பொலீஸார் பயன்படுத்தி வருகின்றனர்.

வன்முறைக்குழுக்கள், வாகனங்கள், கட்டடங்கள் மீது பெட்ரோல் குண்டுகளை வீசி வருகின்றனர். சில இடங்களில் பொலீஸாருடன் துப்பாக்கிச் சண்டையும் நடைபெற்றுள்ளதாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது [illegible]ம் நடவடிக்கை எடுக்கப்படும் என பொ[illegible]ஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க)

## சிட்டை எழுதுநர் தேவை

*யாழ்.நகரில் பிரபலமான சிற்றுண்டிச்சாலை ஒன்றிற்கு சிட்டை எழுதுநர் தேவை. 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.*

**விளம்பர இல:-2741,**
**மோ/பா உதயன்.**

(42370) (32-11-19)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

வடமராட்சி,நவ.8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை வாராந்தம் நடத்திவரும் ஆன்மீகத் தொடர் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ''ஆசை அறுத்த அறுவர்'' என்னும் தலைப்பில் கீழ்கரவை ஆசிரியர் சைவப் புலவர் சி.நவரத்தினம் சொற்பொழிவு நிகழ்த்துவார். (3-173-202)





*யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் இளவாலை சுப்பிரமணியம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு இலவசமாகக் காலணிகள் வழங்கப்படும்போது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் றோட்டேரியன் பாலசுப்பிரமணியம் மாணவர்களுக்குக் காலணிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். இதற்கான நிதியுதவியை ஆஸ்திரேலியாவில் இருக்கும் கழக அங்கத்தவர் எஸ்.விக்கினேஸ்வரன் வழங்கியுள்ளார்.* [203]


உ.
-வீராட் விஸ்வப் பிரமண நம-

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

### *சபிண்டீகரண அழைப்பும்*



திருமுறைப் பண்ணிசைமணி,
கலாபூஷணம், சங்கீதபூஷணம்

அமரர்

## வல்லிபுரம் பரமசாமி

(ஓய்வுபெற்ற இசை ஆசிரியர்)

25.10.2005 ஆம் நாள் அமரத்துவம் அடைந்த அமரர் வல்லிபுரம் பரமசாமி அவர்களின் சபிண்டீகரண, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (09.11.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் அமரரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து நண்பகல் மதிய போசனம் இடம்பெறும். அனைத்து நிகழ்வுகளிலும் குடும்ப சமேதரராய் வருகை தந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*27/1, கலைமகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* **-குடும்பத்தினர்.**


(42370) (32-11-19)



## வாழ்த்துகளும் நன்றிகளும்



கௌரவ யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு.இ.த.விக்னராஜா,
யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்,
யாழ். நீதிவான் நீதிமன்றப் பதிவாளர்
செல்வி மீரா கந்தசாமி



கௌரவ நீதியமைச்சர் உயர்திரு.டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன,
நீதியமைச்சு செயலாளர் உயர்திரு.சுகந்த கம்லத்,
நீதியமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர்
உயர்திரு.டபிள்யூ.ஏ.சேனாரத்ன

**ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களும் நன்றிகளும்.**

1985 தொடக்கம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அமய அடிப்படையில் கடமைபுரிந்தபோது இடையில் ஏற்பட்ட நாட்டு சூழ்நிலைகளால் எனது கோவைகள் அனைத்தும் சேதமடைந்து நிரந்தரப் பதவி கிடைக்காது மிகவும் சிரமப்பட்ட எனக்கு தங்களது முயற்சியால் அலுவலகப் பணியாளர் சேவையில் நிரந்தரப் பதவியைப் பெற்றுத்தந்து சேவையில் ஓய்வூதியம் பெற வழி வகுத்த தங்களுக்கு என்றென்றும் எனது இதயபூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கதிரவேலு செல்வம்
[இளைப்பாறிய நீதிமன்ற ஊழியர்], கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(42400)
(24-32-11-19)



மக்கள் பலத்தில்...

# உதயன்

## 20 ஆண்டு சேவைப் பூர்த்தியை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்திலான

# சிறுகதைப் போட்டி

**போட்டி நிபந்தனைகள்**



* சிறுகதைத் துறையில் ஆர்வமுள்ள நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவராக இருப்பினும் ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
* இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு வயதுக்கட்டுப்பாடு எதுவும் இல்லை.
* ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், அவை தனித்தனியான கடித உறைகளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* சிறுகதைகள் A4 அளவுத்தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுகதையும் A4 அளவுத்தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படலாகாது. இது ஒரு திறந்தபோட்டியாகும். எழுத்தாளர்களின் கற்பனைத் திறனுக்கேற்ற வகையில் சிறுகதைகள் அமையலாம். சிறுகதைகள் சமகால சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி, தாக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அமைதல் விரும்பத்தக்கது.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளை மீளப்பெற்றுக்கொள்ள இயலாது.
* பரிசுக்குரிய சிறுகதைகள் இதற்கென நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும்.
* சிறுகதைகள் முற்றிலும் கற்பனைக் கண்ணோட்டத்தில் அமைவனவாயிருத்தல் வேண்டும். தனிப்பட்ட சம்பவங்களை அல்லது தனிப்பட்ட நபர்களை விமர்சிப்பவையாக அமைதல் ஆகாது.
* தெரிவுசெய்யப்படும் முதல்மூன்று சிறுகதைகளுக்கும் கீழ்க்காணும் வகையில் பரிசில்கள் வழங்கப்படும்.

**முதலாவது பரிசு : தங்கப்பதக்கமும் 10,000 ரூபா பணமும்**
**இரண்டாவது பரிசு : தங்கப்பதக்கமும் 5,000 ரூபா பணமும்**
**மூன்றாவது பரிசு : 5,000 ரூபா**

* பிரசுரத்துக்குத் தகுதியானவையாகக் கருதப்படும் சிறுகதைகள் உதயனிலும் எமது சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியிலும் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எந்தவொரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ பிரசுரிக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏற்கனவே வானொலியில் ஒலிபரப்பான, இணையத்தளத்தில் வெளிவந்த சிறுகதைகளை அனுப்புதல் ஆகாது. அவை கிடைக்கப்பெறின் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
* போட்டிக்குரிய சிறுகதைகளை எதிர்வரும் **நவம்பர் 25ஆம்** திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக

**உதயன் 20 ஆவது ஆண்டு சிறுகதைப்போட்டி**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

* "உதயன்",சுடர்ஒளிப் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.
* போட்டி தொடர்பான சகல தீர்மானங்களிலும் பிரதம ஆசிரியரின் முடிவே இறுதியானது.



## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தலில் ஒரு மாற்றம்

*சென்ற 25.10.2005 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'உதயன்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட மின்தடை பற்றிய அறிவித்தலில் 19.11.2005 அன்று மின்தடை ஏற்படும் என்று அறிவித்த இடங்களுக்கு 12.11.2005 அன்றே மின்தடை ஏற்படும் என்பதையும் ஏனைய இடங்களுக்கான மின்தடை பற்றிய திகதிகளில் மாற்றம் எதுவும் இல்லை என்பதையும் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.*

மின்பொறியியலாளர்,
யாழ்.பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.
2005.11.07.

**''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''**
**இலங்கை மின்சார சபை.**

(சி/46133) (32-11-19)



## காப்புறுதி ஆலோசகர்கள் தேவை

காப்புறுதித் துறையில் 25 (இருபத்தைந்து) வருடங்களிற்கு மேல் அனுபவம் பெற்றவரும் ஆங்கிலம்/உளவியல்/காப்புறுதி/முகாமைத்துவம்/சமூகசேவை ஆகியவற்றில் சர்வதேச தரத்திற்கு ஒப்பாக பயிற்சி பெற்றவரும் பிராந்திய ரீதியாகவும் அகில இலங்கை ரீதியாகவும் காப்புறுதித் துறையில் சிறந்த குழுத்தலைவருக்கான பரிசில்கள் பெற்றவருமான சிரேஷ்ட குழுத்தலைவர் ஒருவருக்கு காப்புறுதி ஆலோசகர்கள் தேவை.

**தகைமைகள்:**

1. க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் உட்பட சித்தி, க.பொ.த. உயர்தரத்தில் சித்தி.
2. ஆங்கிலத்தில் காப்புறுதி விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல்.
3. நாளொன்றிற்கு ஆகக் குறைந்தது 2 மணித்தியாலங்களும் ஆகக்கூடியது எட்டு மணித்தியாலங்களும் காப்புறுதிச் சேவைக்காக அர்ப்பணித்தல்
4. சிறந்த தொடர்பாடல் திறமை
5. வயது 20-45 இற்குமிடையில்
6. கணனி பற்றிய அடிப்படை அறிவு

**நன்மைகள்**

1. இலங்கையில் காப்புறுதி ஆலோசகர் ஒருவர் பெறக்கூடிய அதியுயர் சலுகைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும்.
2. மாதமொருமுறை விசேட காப்புறுதிப் பயிற்சி வழங்கப்படும்.
3. வருடாந்தம் சிறந்த காப்புறுதி ஆலோசகர்கட்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.

**பொருத்தமானவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**
**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**
**இறுதித்திகதி: 14-11-2005.**

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-*
**விளம்பர இல:- 2743,**
**உதயன்.**

(42559) (32-11-19)

# சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தியது.

இந்தக் கருத்தரங்கில் சட்டத்தரணிகள், மற்றும் சட்டமாணவர்களுக்கு அண்மைக்கால சட்டவளர்ச்சி குறித்து சிரேஷ்ட சட்டத்தரணிகள், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட சட்ட ஆலோசகர்கள் ஆகியோர் விரிவுரை வழங்கினர்.

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீடப் பீடாதிபதி கே. குமாரவடிவேலின் வரவேற்புரையையடுத்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து நீதித்துறையின் சமத்துவம் பற்றிய அறிமுக உரையை ஐ.நா.திட்ட அலுவலர் சாருக்க சமரசேகரவும் -

வர்த்தக சட்டங்களின் வளர்ச்சி பற்றி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும்-

சமத்துவம் மற்றும் பாகுபாட்டின்மைக்கான அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு என்னும் தலைப்பில் ஐ.நா.தேசிய திட்ட இணைப்பாளர் திருமதி விவேகா சிறிவர்த்தன டிசில்வாவும்-

இலங்கையில் பெண்களின் உரிமைகளை மேம்படுத்தல் என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் எம். சுதர்சனும்-புத்திஜீவிகளின் சொத்து சட்டத்தில் உருவாகும் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சட்டத்தரணி எம். எ. சுமந்திரனும் விரிவுரையாற்றினர்.

விரிவுரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

(ஒ-7-203)

# தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு ஜப்பானிய அரசு ரூ1கோடி உதவி

கொழும்பு,நவ.8

ஜனாதிபதி தேர்தலின் போது கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் பவ்ரல் அமைப்புக் கும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்திற்கும் சுமார் 1 கோடி ரூபாவை ஜப்பானிய அரசு வழங்கியுள்ளது. இத்தொகையில் 50 லட்சம் ரூபா பவ்ரல் அமைப்புக்கும் 58 லட்சம் ரூபா மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தங்கள் அண்மையில் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் அக்கியோ சுடோவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கைச்சாத்திடப்பட்டன.பவ்ரல் அமைப்பின் சார்பில் அதன் தலைவரான கிங்ஸ்லி ரொட்ரிகோவும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியஜோதி சரவணமுத்துவும் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். ஜப்பானிய அரசின் சார்பில் கைச்சாத்திட்டதூதர் அக்கியோ சுடோ இது குறித்து கருத்து தெரிவிக்கையில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் இடம் பெறுமென ஜப்பானிய அரசு எதிர்பார்ப்பதாகவும் - ஜப்பானிய அரசு வழங்கியுள்ள உதவி நிதியை சம்பந்தப்பட்ட இரு அமைப்பினரும் செயற்றிறன் மிக்க வகையில் பயன்படுத்துவார்களெனத் தாம் எதிர்பார்க்கிறார் எனறும்-தெரிவித்தார்.

(ஒ-206)

## மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழா கல்விப்போட்டி - 2005

மேற்படி கல்விப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில்13.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

☞ இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சுட்டெண்கள் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும்

☞ முன்னர் வெளியிடப்பட்ட கல்விப் போட்டி விதி முறைகளுக்கமைவாகவே போட்டிகள் நடைபெறும்.

| | |
|---|---|
| தமிழ்கட்டுரைப் போட்டி | 9.00 - 10.00மணிவரை |
| ஆங்கிலகட்டுரைப்போட்டி | 10.00 - 11.00மணிவரை |
| தமிழ் பேச்சுப்போட்டி | 11.15 - 12.15மணிவரை |
| ஆங்கில பேச்சுப்போட்டி | 12.15 - 1.15 மணிவரை |
| பொது அறிவுப்போட்டி | 2.00 - 3.00 மணிவரை |
| கவிதைப்போட்டி | 3.00 - 4.30 மணிவரை |

**காரியாலயம் :- C.B கணனிகல்வி நிறுவனம்**

சி. செல்லத்துரை
தலைவர்.

விளம்பர அனுசரணை

**C.B Computer Academy**
Station Road, Kondavil. T.P No. 021-4590291

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
மேற்படிப்பு வரை ஆங்கில வகுப்புகள்
By: விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
'THE ROYAL IS THE BEST' (42552)










## முக்கிய அறிவித்தல்

நேற்று (07.11.2005)ல் துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தான இராஜகோபுரத் திருப்பணி நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தச் சீட்டிழுப்பு எதிர்வரும் 26.02.2006 ஆம் திகதியில் மகாசிவராத்திரி அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறிவித்துக்கொள்கின்றோம். இது வரை அதிர்ஷ்டலாபச் சீட்டை வாங்கியவர்கள் கவனமாக வைத்திருக்குமாறு வேண்டுகின்றோம்.

(சி-46140) (54-15-13) திருப்பணிச் சபையினர்.

## விபத்துகளில் இருவர்காயம்

தென்மராட்சி,நவ.8

மோட்டார் சைக்கிள் சக்கரம் சறுக்கியதால் ஏற்பட்ட இருவேறு விபத்துகளில் இருவர் காயமடைந்தனர்.

நாவற்குழிப் பாலத்தில் மோட்டார் சைக்கிள் சக்கரம் சறுக்கியதில் அதனைச் செலுத்திச் சென்றவரான தாளையடியைச் சேர்ந்த ஏ.பகீரதன் (வயது -24) என்பவரும்-

கொடிகாமம் பகுதியில் மோட்டார் சைக்கிள் சக்கரம் வீதியில் சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு கொடிகாமம் எருவனைச் சேர்ந்த சி. சுரேகா (வயது-17) என்பவரும்-காயமடைந்தனர்.

அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(ஒ-117)

## நாடகப்பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.8 - பிரிட்டனின் மன்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் நாடக ஆய்வாளர் சாலட் றெனஸ்லி நாடகங்கள் குறித்த ஆய்வை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் யாழ். திருமறைக்கலாமன்றத்தின் கேட்போர் கூடத்தில் நாளை மறு தினம் வியாழக்கிழமை பி.ப.3 மணியிலிருந்து 7 மணிவரை நாடகப்பயிற்சிப் பட்டறையை நடத்த வுள்ளார். (ஒ-190)

## சாவகச்சேரி நகரசபை
## 01.01.2006 முதல் 31.12.2006 வரை
## குத்தகைகள், சேவைக்கான
# கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி : 25.11.2005 காலை 12.00 மணி
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 01.12.2005 காலை 10.00 மணி
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 01.12.2005 காலை 11.00 மணி

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை. | கேள்விப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்க முடியாதது |
|---|---|---|---|---|
| 1. | சாவகச்சேரி பொதுச்சந்தைக் குத்தகை | 12,10.000.00 | 5,000.00 | 200.00 |
| 2. | சாவகச்சேரி மீன் சந்தைக் குத்தகை | 193,600.00 | 1,000.00 | 200.00 |
| 3. | ஆட்டிறைச்சிக் கடை NMS 1 | 132,000.00 | 1,000.00 | 200.00 |
| 4. | ஆட்டிறைச்சிக் கடை NMS 11 | 132,000.00 | 1,000.00 | 200.00 |
| 5. | மாட்டிறைச்சிக் கடை NMS 111 | 198,000.00 | 1,000.00 | 200.00 |
| 6. | மாட்டிறைச்சிக் கடை NMS 1V | 198,000.00 | 1,000.00 | 200.00 |
| 7. | துவிச்சக்கரவண்டித் தரிப்பிடக் குத்தகை | 55,000.00 | 1,000.00 | 200.00 |
| 8. | காலைக் குத்தகை | 22,000.00 | 1,000.00 | 200.00 |

குறிப்பு:

- இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விடுவிக்கப்படும் மாத வாடகைகளை செலுத்த வேண்டும்.
- கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை மாதவாடகை என்பவற்றிற்கு 15% பெறுமதி சேர்வரி மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
- கேள்விப் படிவங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டை கொண்டுவர வேண்டும்.
- மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
07.11.2005

(சி-46138) (54-15-13)

திருமதி கு. ஆறுமுகம்
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா பிலேந்திரன் ஜேம்ஸ்



(முன்னாள் ஊழியர், யா/போதனா வைத்தியசாலை)

யாழ். கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பி.ஜேம்ஸ் அவர்கள் நேற்று (07.11.2005) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலேந்திரன்-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் லூத்சுரஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயரட்ணம் (முன்னாள் ஊழியர் இ.போசபை) ஜெயம்மா மோசஸ், காலஞ்சென்ற டேவிட் அவர்களின் அன்புச் சகோதரனும் ஸ்கொலஸ்ரிக்கா (ஆசிரியை யா/நவீல்ட் பாடசாலை, கைதடி), வனித்தா (இத்தாலி), சூரியா (யா/கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) அன்ரன் லூர்சினோ (Friends Musical group) அவர்களின் அன்புத் தந்தையும் கோபாலசிங்கம் (சவுதி) கிறிஸ்ரி (இத்தாலி), தர்ஷா அவர்களின் அன்பு மாமனாரும் பிரவீனா, கிசோனா, சரோண் பிரியந்தினி, பிறாயன், டவ்றீனா, அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல. 11, சென். மேரிஸ்*
*2ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

(42564) (54-15-13)

தகவல்:
அன்ரன் லூர்சினோ
(மகன்).

## சிவஞானசுந்தரம்பிள்ளை கஜேந்திரநாத்

(முன்னாள் மின்பொறியியலாளர் - மகாவலித்திட்டம்)



அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம்பிள்ளை கஜேந்திரநாத் 04.11.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம்பிள்ளை-திருப்பதி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவஞானம்-சிவஞானவல்லி தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திரலேகாவின் (லண்டன்) அன்புக்கணவரும் ஸ்ரீகௌசிகா (லண்டன்), ஸ்ரீசங்கர் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் மிருநாளினி (சுன்னாகம்),Dr. விஜேந்திரநாத் (தென்னாபிரிக்கா), சுஜேந்திரநாத் (அநுராதபுரம்), ஜெஜேந்திரநாத் (கணக்காளர்-நியூசிலாந்), நிஜேந்திரநாத் (ஹொலண்ட்), ராஜேந்திரநாத் (பொறியியலாளர் - பண்டாரவளை), ஆகியோரின் அருமைச்சகோதரனும் விக்னேஸ்வரன் (சுன்னாகம்-கடற்றொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்), வள்ளிநாயகி (தென்னாபிரிக்கா), ரஞ்சனா (நியூசிலாந்), நியோமி (ஹொலண்ட்), சாந்தரமணி (பண்டாரவளை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சித்ரலேகாதிரவியம் (கொழும்பு), கெங்காதரன் சிறிரஞ்சினி (ஆஸ்திரேலியா), சந்திரலேகா கதிரவேல் (ஆஸ்திரேலியா), சிறிதரன் யசோதரா (ஆஸ்திரேலியா), கிரிதரன் ஜமிலா (லண்டன்), சூரியலேகா சரவணபவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் விஜயகாந்த (பொறியியலாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்), விஸ்ணுகாந்த், விஜயதட்சனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஜயபிரதாப் (கணனிப்பொறியியலாளர்), விஜயதர்சன் (தென்னாபிரிக்கா), திவ்வியா (நியூசிலாந்), தர்சிகா (நியூசிலாந்), ராபுல்சொலமன் (ஹொலண்ட்), நிசாந்தப்பிரியா (பண்டாரவளை), ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2005) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் இராதா இல்லம் தும்பளையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி, தும்பளை, பருத்தித்துறை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை,*
*பருத்தித்துறை.*

(42562) (54-15-13)

தகவல்:-
குடும்பத்தினர்.

## திருமதி ஞானிகந்தையா பொன்னம்மா
## (கோயிலாச்சி)

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா அவர்கள் நேற்று (07.11.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மாதர் கந்தையாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஞானிகந்தையா (இருபாலை கிழக்கு, முனியம்மன் கோயில் தர்மகர்த்தாவின்) அன்பு மனைவியும், ஸ்ரீபாலசுப்பிரமணியம் (லண்டன்) ஸ்ரீபாலச்சந்திரன் (பிரான்ஸ்), ஸ்ரீபாலசண்முகன் (கொழும்பு), ஸ்ரீமதிகமலாதேவி (ஜேர்மன்), காலஞ்சென்ற ஸ்ரீபாலசரவணபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(42563) (54-15-13)

தகவல்:-
ஸ்ரீபாலகிருஷ்ணன்.

# ரணில் ஜனாதிபதியானால் புதிய பட்ஜெட் சமர்ப்பிப்பார்

## இப்படிக் கூறுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ.8

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வரவு - செலவுத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி முற்றாக நிராகரிக்கின்றது. இன்று நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டம் ஒரு வெற்றுக் காகிதமே. நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கும் உண்மையான வரவு - செலவுத்திட்டத்தை 18ஆம் திகதிக்குப் பின் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே சமர்ப்பிக்கும் என்கிறார் ஐ.தே.க. பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

நேற்றுக்காலை எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

''ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கக்கூடாது என ஐ.தே.க. மேற்கொண்ட சகல முயற்சிகளும் உதாசீனப்படுத்தப்பட்டுவிட்டன. அரசாங்கம் திட்டமிட்டபடி இன்று செவ்வாய்க் கிழமை வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஐ.தே.க.வின் நிலைப்பாடு என்ன?'' - என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

''இவர்கள் சமர்ப்பிக்கப்போவது வரவு-செலவுத்திட்டமே அல்ல. மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்கு திரட்டுவதற்காக வெளியிடப்படும் ஒரு தேர்தல் 'புருடா'தான் அது.

''இதனை இவர்களால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளவும் முடியாது.

''நாட்டுமக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதும் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான உண்மையான வரவு - செலவுத்திட்டத்தை எங்கள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே சமர்ப்பிப்பார். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.'' - என திஸ்ஸ அத்தநாயக்க பதில் அளித்தார்.

## இந்திய வெளிவிவகார அமைச்சர் பதவிநீக்கம்

புதுடில்லி,நவ.8

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சுப் பதவியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பொறுபேற்றுள்ளார். நட்வர் சிங் தொடர்ந்து அமைச்சரவையில் நீடிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சிககாலத்தில் எண்ணெய்க்குப்பதில் உணவுத் திட்டத்தில் ஊழல் புரிந்தார் என ஐ.நா. விசாரணைக் குழு இவர்மீதும் அண்மையில் குற்றஞ் சாட்டியிருந்தது. இதைத்தொடர்ந்து நட்வர் சிங் பதவி விலகவேண்டும் என இந்திய எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. இதனைத் தொடர்ந்து நட்வர் சிங் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

## சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டம் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உட்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான யோசனைகளையும், அதற்கான பெருமளவு நிதி ஒதுக்கீடுகளையும் கொண்டிருக்கிறது.

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள யோசனைகள் வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்டவை. புதிய அபிவிருத்தித் தசாப்தமொன்று உருவாவதற்கான யோசனைகளும், திருத்தங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவை தலைமையாகக் கொண்டுள்ள அரசின் இறுதி வரவு - செலவுத் திட்டமான இது அரசியல் மற்றும் இனரீதியான வேறுபாடுகளைக் கொண்டதல்ல.

- இவ்வாறு நிதியமைச்சர் மேலும் கூறினார். (க)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ். செயலகத்தில் 15 நிலையங்களில் நடைபெற்ற வாக்களிப்புகளை இவர்கள் பார்வையிட்டனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி பொதுவாக்களிப்பு முடியும்வரை இவர்கள் இருவரும் இங்கேயே தங்கியிருந்து தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்களின் சார்பாகவும் வாக்களிப்பு நடைபெறும் இடங்களில் முகவர்கள் பிரசன்னமாகி இருக்கமுடியும் என்றாலும் நேற்றைய தபால் மூலவாக்களிப்பின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் சார்பாக மாத்திரமே - அதுவும் தீவகத்தில் மட்டும் சில முகவர்கள் தேர்தல் வாக்களிப்பை கண்காணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தபால் மூல வாக்களிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. தொழில்நுட்பக்கல்லூரி உத்தியோகத்தர்களுக்கான தபால் மூலவாக்களிப்பு நிலையம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் உத்தியோகத்தர்கள் எவரும் வாக்களிக்கவில்லை என்று கூறப்பட்டது.

வாக்களிப்புகளை புறக்கணிக்கும்படி யாழ். தொழில்நுட்பக்கல்லூரி வளாகங்களில் 'யாழ். மக்கள்' என்ற பெயரில் துண்டு பிரசுரங்களும் ஒட்டப்பட்டிருந்தன. (த-12-ரி)


IIS

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006

விண்ணப்பித்து விட்டீர்களா?

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

விண்ணப்ப முடிவுத்திகதி
20.11.2005

இயக்குநர்
IIS,யாழ்ப்பாணம்


## பகிஷ்கரிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் உயரதிகாரி ஒருவரின் ஒத்துழைப்பும் இத்திட்டத்துக்குக் கிடைக்கும் என்று சம்பந்தப்பட்ட தரப்பினர் நம்புகின்றனர்.

ஆளும் தரப்பு வேட்பாளர்களின் உறவினர் ஒருவர் முன்னர் இராணுவத்தில் பணியாற்றியவர். கீழ்நிலை அதிகாரியாகப் பணியாற்றிய இவர் இப்போது வடக்கு, கிழக்கில் தங்கிநின்று தன்னுடன் முன்னர் பணியாற்றிய கீழ்நிலை இராணுவ அதிகாரிகளோடு பல சுற்றுச் சந்திப்புக்களை நடத்தி தொடர்பாடல்களை மேற்கொண்டு வருகின்றார் என்றும் -

இந்த வாக்குகளைச் சுருட்டும் திட்டத்துக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள கீழ்நிலை அதிகாரிகளின் ஒத்துழைப்பு, உதவியைப் பெற்றுக்கொள்வது அவரது தற்போதைய முயற்சியின் நோக்கம் என்றும் - கூறப்படுகின்றது.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி வாக்காளர்களுக்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்படும் வாக்குச்சாவடிகளையும் இத்திட்டத்துக்குப் பயன்படுத்தும் எண்ணம் சம்பந்தப்பட்டோருக்கு இருக்கிறதாம். (க)

## வாக்காளர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

முதலாம் எதிர்மனுதாரரான தேர்தல் ஆணையாளரின் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சமிந்ரா பெர்னாண்டோ ஆஜராகியிருந்தார்.

அவர், இந்தத் தேர்தலின்போது வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்கள், இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து அங்குள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையாளரால் செய்து கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் அடங்கிய 10 அம்சத் திட்டத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதனைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம் வடக்கு - கிழக்கு வாக்காளர்களும் ஏனைய பிரதேச வாக்காளர்களும் தமது வாக்குரிமையை அளிக்கும்போது, தம்மைச் சரியாக அடையாளப்படுத்துவதற்கான நடைமுறை ஒன்றை உயர் நீதிமன்றமே எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை (நாளை) வெளியிடும் எனத் தெரிவித்தது.

மக்களின் இறைமை அவர்களின் வாக்குரிமை மூலமே பிரயோகிக்கப்படுமென அரசமைப்பின் நான்காவது பிரிவு தெளிவாகச் சொல்கிறது. அந்த உரிமை ஆள் மாறாட்டமின்றித் தெளிவாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடைமுறைத் திட்டத்தையே உயர் நீதிமன்றம் நாளைமறுதினம் முன்வைக்கும் என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

மனுதாரர்கள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயசிங்கவும், எதிர்மனுதாரர்களில் ஒருவரான ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸியும் ஆஜராகியிருந்தனர்

### வீட்டில் இருந்தோரைக் கட்டிவைத்து

# வெள்ளவத்தையில் நேற்று பெரும் தொகை கொள்ளை!

## துப்பாக்கி முனையில் கைவரிசை

கொழும்பு, நவ.8

இரகசியப் பொலீஸாரெனத் தம்மை அடையாளங்காட்டிய நான்குபேர், வெள்ளவத்தையிலுள்ள தமிழ் மருத்துவர் ஒருவரின் வீட்டிலிருந்து லட்சக்கணக்கான ரூபா பணத்தையும், தங்க நகைகளையும், பெறுமதியான பொருட்கள் பலவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுப்பிற்பகல் வெள்ளவத்தை ஈ.ஏ. குரே மாவத்தையிலுள்ள மேற்படி மருத்துவரின் வீட்டுக்கு வெள்ளை வானில் வந்திறங்கிய நான்குபேர் கொண்ட கோஷ்டி தங்களை இரகசியப் பொலீஸ் விசாரணைக் குழுவென்று அறிமுகப்படுத்தியது.

வீட்டைச் சோதனையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கமைய வீட்டிலிருந்தவர்கள் அதற்கு இடமளித்துள்ளனர். இதனையடுத்து துப்பாக்கி முனையில் வீட்டிலிருந்தவர்களை அறையொன்றுக்குள் இழுத்துப் பூட்டிய கொள்ளையர்கள் வீட்டிலிருந்த பத்து லட்சம் ரூபாப் பணம், தங்க நகைகள் மற்றும் கிரடிட் கார்ட்டுகள் என்பனவற்றைக் கொள்ளையிட்டு தப்பியோடினர்.

வெள்ளவத்தைப் பொலீஸார் இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## நவீன் ஆற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ரணிலின் உருவாக்கமே கருணா குழு; ஐ.தே.கட்சி எம்.பி. நவீன் பெருமிதம்; பிரபா போருக்குத் தயாரானால் எதிர்க்க அமெ., இந்தியப் படைகள் ஏற்பாடாம்' என்ற தலைப்புடன் கினிகத்தேனையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், நவீன் திஸநாயக்கா ஆற்றிய உரை 'உதயன்'இல் நேற்றுமுற்பக்கத் தலைப்புச் செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது.

அதையே மறுத்துரைத்திருக்கின்றார் நவீன் திஸநாயக்கா. அவரது மறுப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திங்களன்று 'உதயன்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட தலைப்புச் செய்தி குறித்து நான் பின்வரும் விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். இச்செய்தியில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் புலிகளுடன் போரிடுவதற்காக இந்திய - அமெரிக்கப் படைகளை ஒழுங்கு செய்திருக்கின்றது என்று நான் கினிகத்தேனையில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினேன் என வெளிவந்த தகவல் தவறானது. இந்தக் கருத்தை நான் வெளியிடவில்லை என்பதை திட்டவட்டமாக அறிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

நான் எனது உரையை சிங்களத்தில் நிகழ்த்திய காரணத்தினால் ஒருவேளை எனது கருத்தை சரியாகப் புரிந்துகொள்ளாமல் செய்தியாளர். அந்தச் செய்தியை எழுதியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

நான் அங்கு உரையாற்றியபோது, இலங்கை இராணுவத்தினர் இனிமேலும் யுத்தத்திற்கு செல்லவேண்டும் என்று சஞ்சலமடையத் தேவையில்லை என்று கூறி, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சமரசப் பேச்சு மூலம் எல்லோரும் உடன்படக்கூடிய ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்தும் என்றே கூறினேன். இத்தகைய சமாதானத் தீர்வு ஏற்படும் போது இலங்கையில் யுத்தம் நடைபெறப் போவதில்லை என்றே நான் அங்கு வலியுறுத்தினேன்.

இந்தச் சமாதான உடன்பாட்டின் கீழ் அதிக அளவிலான அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்தி ஒஸ்லோ உடன்பாட்டின்படி எமது நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிப்பாதுகாப்பதே புதிய அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்கும் என்றும் தான் கூறினேன்.

புலிகளிடம் இருந்து கருணா குழுவைப் பிரித்ததற்கான காரணம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று நான் கூறவில்லை. அப்படி நான் தெரிவித்தேன் எனக்கூறப்படுவதை திட்டவட்டமாக மறுக்கிறேன். யுத்தநிறுத்த உடன்பாட்டின் கீழ் கருணா பிரிவு உட்பட இலங்கையில் உள்ள சகல ஆயுத குழுக்களினதும் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதற்கும் ரணில் விக் கிரமசிங்கவின் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றே நான் கூறினேன்.

எனது கருத்தை சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தினால்தான் இந்த தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடிய இச்செய்தி வெளிவந்துள்ளது. - இப்படி அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

## ஓமந்தை ஊடான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலிருந்து கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவோர் சோதனையிடப்பட மாட்டார்கள், அப்படி வாக்களிக்க வருவோர் தம்முடன் எந்தப் பொதியையும் எடுத்துவரக் கூடாது, ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்தில் 63 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும், உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 12 வாக்களிப்பு நிலையங்களும், மடு வீதி புனித அந்தோனியார் தேவாலயத்தில் 4 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட இருக்கின்றன ஆகிய தீர்மானங்களும் எட்டப்பட்டன.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வவுனியா தேர்தல் மாவட்டத்தின் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 84 வாக்காளர்களில் 18 ஆயிரத்து 857 பேரும் -மன்னார் தேர்தல் மாவட்டத்தின் 78 ஆயிரத்து 900 வாக்காளர்களில் 16 ஆயிரத்து 131 பேரும் - முல்லைத்தீவு மாவட்டத்தின் 66 ஆயிரத்து 596 வாக்காளரில் 65 ஆயிரத்து 504 பேரும் - புலிகளின் கட்டுப்பாட் டுப் பிரதேசத்தில் வசிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஓ-164)

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.''-என்று புதிய கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தேசிய ஜனநாயக தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மலையகத்தில் எல்லா பிரதேசங்களிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவதாக தெரிவித்துள்ளது.

தேசிய ஜனநாயக காங்கிரஸால் ஐ.தே.கவிடம் முன்வைக்கப்பட்ட ஆறு கோரிக்கைகள் வருமாறு:-

- மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு போதிய சுகாதார வசதியை ஏற்படுத்தல்.
- கிராமிய வைத்தியசாலை அமைத்தல்.
- பெண் தொழிலாளர்களுக்கு ஆறு மணித்தியாலம் வேலை வழங்குதல்.
- மலையகத்தில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு அரச துறையில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல்.
- மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு சொந்தமாக ஏழு பேர்ச்சஸ் காணி வழங்கப்படல் வேண்டும்.
- தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தல். (க)

## மரண அறிவித்தல்

### காலிங்கர் சின்னையா



இணுவிலைப் பிறப்பிடமாகவும்-ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலிங்கர் சின்னையா அவர்கள் நேற்று (07.11.2005) காலமானார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன் (உரிமையாளர், சர்மிலன் களஞ்சியம்), வளர்மதி (ஆசிரியை - வசாவிளான் ம.ம.வி.), கோடீஸ்வரன் (பிரபல வியாபாரி), ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வசந்தி, உதயகுமார், நந்தினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(42565) (25-13-12)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.